தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை
என(து)
உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. | வெளி நாடு மூன்றணு. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 1 | சென்னை 5—3—1955 சனிக்கிழமை | இதழ் 36

சொல்வல்லன், சோர்விலான் !



சொற் கோமான் !

"கேட்டார் பிணிக்குத் தகையவாய் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்ருர் திருவள்ளுவர். அந்தக் குறளுக்கு இலக்கணமாக அமைந்த சொற்கோமான், நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இவ்வாரத் தென்றலின் முகப்பிற்கு அழகு சேர்க்கிருர்.

தேர்ந்தெடுத்த சிறந்த கருத்துக்களை கேட்பவரும், கேட்க விரும்பாதவரும் விரும்பிக் கேட்டுவிட்டுப் போகும்படி, அழகு தமிழில் அள்ளி அள்ளி வைக்கும் ஆற்றலாளர். சக்தி வாய்ந்த அரசியல் எழுத்தாளர். தமிழ் கொஞ்சும் மன்றம் கண்ட மேதை !

பாண்டிய நெடுஞ்செழியன் என்றுலே பகைவர் கூட்டம் நடுநடுங்கும். பகுத்தறிவியக்கத்தை தூற்றுவோரும்; தூர நின்று கூவுவோரும் இவர் பெயரைக் கேட்டால் வாயடைத்துப் போவார்கள். கடுஞ்சுவடிக் கவிதையெல்லாம் கனிவாய்க் கூறும் கலைவல்லோன். நீதியும்-நேர்மையான நடத்தையும் இவர்பால் நிற்கும். இவர் பேச ஆரம்பித்தால் கடல் மடை திறந்தாற் போல் இருக்கும். அரசியலா? இலக்கியமா? வரலாறு? பொருளாதாரமா? புள்ளிவிவரமா? இத்தனையும் அவர் பேச்சிலே மிதந்து வரும்; தென்றலும், புயலும், மாறி மாறி வீசும். மக்கள் மனம் மகிழும். இந்த சீரிய பண்பாளர் இயக்கத்தின் முன்னணியாளர். கலை பலவும் கற்று, தாயகத்திற்கு தொண்டாற்றும் நாவலரை கலைத் தலைவரை, ஒழுக்கம் மிக்க ஒரு அரசியல் வாதியை, தென்னகம் பெற்றுப் பெருமையடைகிறது.

அவர் வாழ்க !

★ அவனை, இகல் வெல்லல் யார்க்கும் அரிது !



அரசியலிலே 'ராசதந்திரம்' என்ப தாக ஒன்று உண்டு. 'கொக் கொக்க' நடந்துகொள்ளும் போக் கையே அந்தப் பெயரிட்டு அழைப் பார்கள். எந்த ஒரு அரசியல் வாதி யும் ராசதந்திரம் தெரிந்தவனு யிருந்தால்தான், தன் கொள்கை களில் வெற்றி பெறுவதோடு, மக்களிடையே நிலையான செல் வாக்குப் பெறவும் முடியும். அந்த செல்வாக்கை மேலும் தன் கொள் கைக்கு அரணுக்கவும் முடியும். அதைவிட்டு, காலத்திற்குக் காலம் 'புதிய தப்பட்டை' தட்டிக்கொண்டு, நிதானமான ஆய்வின்றி, படபடப் பாகச் செயல்புரியும் யாரையும், உலகம் அறிவாளனுகவோ, அர சியல் முறை தெரிந்தவனுகவோ ஏற்றுக்கொள்வதில்லை. காரணம் நேற்றுச் சொன்னதை அவன் இன்று மறந்துவிடுவான். அதற்கு நேர் விரோ.மாக இன்று பேசு வான். அதைக் கேட்கிற மக்கள், நாளையும் அவன் அதே நிலையில் இருப்பான் என நம்பமாட்டார்கள்.

அரசியல்வாதி என்பவன் முள் மேல் பரதநாட்டிய 'ஜதி' போட வேண்டியவன்; 'ஜதி' முறையும் தவருது காலும் புண்ணுகாது ஆட வேண்டியவன். அவன் தாறு மாருகக் குதித்தால் கால் ரண மாகி, ஆட்டமும் பாதியில் நின்று போகும்! முக்கியமாக அரசியல் வாதிக்கு வேண்டியதே நிதானம் தான்! நிதானத்தைத் தேராகக் கொண்ட அறிவுதான் நல்ல முறை யில் செயல்படும். நிறைந்த புகழ் பெற்று வருகிற ஒரு அரசியல்வாதி, நிதானந்தவறிப் பேசிவிட்டால் நிலை என்ன ஆகும் என்பதற்குக் கண்கண்ட உதாரணம் சர்ச்சில்! ரஷ்யா நேசநாடாக இருக்கும் போதே, அதைத் தாக்குவதற்கு ஆயுதங்களைப் பத்திரப்படுத்தச் சொன்னதாக, அவர் ஒரு இடத் தில் பேசிய பேச்சு, அவரை வெகு தூரம் பின்னுக்கிக் கொண்டுபோய் விட்டது என்பதை உலக மக்கள் கண்டனர். அதிகாரத்திலுள்ள அரசியல் வாதிக்கு மட்டுமல்ல; எதிர்க்கட்சி அரசியல் வாதிகளுக் கும் இது பாடமாக இருக்கவேண் டும்.

பொதுவாக, எச்சரிக்கையாக எதை யும் ஆராய்ந்து செயல் புரிகிற பண்புதான் அரசியலுக்கு மிக முக்கியம். அது இல்லாத காரணத் தால்தான் ஆச்சாரியார் ஆட்சி கவிழ்ந்தது; அவரது செல்வாக்கும் குறைந்தது. காமராசருக்கு இன் றைக்குச் சூட்டப்படுகிற புகழ்மாலை யெல்லாம் அவரது நிர்வாகத் திறமைக்குச் சூட்டப்படுவன அல்ல. அவரது எச்சரிக்கையான போக்குக் கும் நிதானத்துக்கும் சூட்டப்படு வையே! சிக்கலான பல நேரங் [illegible] அவர் வாயை அடக்கிக்கொண்

வும், அதே நேரத்தில் அந்த இரு புறத்திற்கும் வேண்டியவர்போல வும் தோற்றந்தருகிருர். நாடகச் சட்டம் பற்றி, காமராசர் கருத்து என்ன? இன்னும் யாருக்கும் புரிய வில்லை. காமராசரைக் கவிழ்க்க, சுப்பிரமணியம் குழுவின் சதி அது என்றும், காமராசர் அதை விரும்பவில்லை என்றும், பெரியார் தலைமையில் உள்ள திராவிட கழகத் தினர் கூறுகின்றனர். அதை எதிர் த்துப் போராடும்போது காமராச ருக்கு 'ஆபத்'தில்லாமல் போராடப் போவதாகப் பெரியார் கூறுகிருர். காங்கிரஸ்காரர்களைக் கேட்டால், "அவருக்குத் தெரியாமல் - அவர் விரும்பாமல்-சட்டம் வரமுடியுமா? அவரும் விரும்பிச் செய்ததே அது!" என்கிருர்கள். இரண்டு அபிப்பிராயங்களும், அவரவர் களின் கண்ணேட்டத்தில் காமராசர் எப்படித் தட்டுப்படுகிருரோ, அப் படியே அதை வைத்துக் கூறப்பட்ட வையே தவிர ஆதார பூர்வமான உண்மை அதில் எதுவுமில்லை! இரண்டு பக்கத்திலும் இருப்பவர் கள் காமராசர் தங்கள் பக்கமே இருப்பதாகக் கருதுகிருர்கள். அவ ரும் அதைக் கெடுத்துவிடாமல், எங்கு எப்படிப் பேசவேண்டுமோ, யாரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படி நடத்துகொள் கிருர்! இதில், எங்கேயாவது அவர் வாய்தவறி, ஒரு சார்பாகப் பேசி யிருந்தாலும் மறு அணி அவர் கையை விட்டுப் போயிருக்கும்! ஊன்றி கவனித்தால், அவருடைய முழுத்திறமையும் நிதானத்தில் மட்டுமே அடங்கியிருப்பது புரியும்.

இதை அவரை 'பகிரங்கமாக' ஆதரிப்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். காமராசருடைய ஆட்சி கவிழ வேண்டுமென்ருே அவரது நல்ல பெயருக்குக் களங்கம் உண் டாகவேண்டும் என்ருே, யாரும் விரும்பமாட்டார்கள்; நாமும் விரும்பவில்லை. அதற்காக - அவ ருக்காக-அவரைப் படுதாவாக்கிக் கொண்டிருக்கிற கட்சிக்கும் உடன் போக வேண்டியதில்லை. தனி மனிதர் ஒருவரிடம் காட்டுகிற அன்பு, அவருக்குப் பின்னுலிருக் கும் சுயநலக்காரர்களுக்கு உண வாகிவிடக் கூடாது. தேர்தலிலே அவர் வெற்றிபெற வேண்டும் என்று சில எதிர்க்கட்சியாளர்கள் விரும்பியபோது, அவர் தோல்வி யுற்ருல், எதிர்க்கட்சியின் பரம விரோதிகள் கைகொட்டிச் சிரிப்பார் கள். தங்கள் வெற்றியாகக் கொண் டாடுவார்கள் என்கிற காரணமும் அதில் உள்ளடங்கி இருந்தது. ஆக வே, கண்ணை மூடிக்கொண்டு, குடி யேற்றம் தேர்தலில் அவரைச் சில எதிர்க்கட்சியாளர்கள் ஆதரித்த போது, யாரும் பெருங்குறையாக எடுத்துக் கொள்ளமுடியவில்லை.

கொண்டாடியபோது, உப்புக்கண் டம் பறிகொடுத்த பார்ப்பனத்தி மாதிரி விழித்ததையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்) ஒரு நன்மைக்காக ஒரு தீமையைச் சகித்துக்கொள்ளும் மனப்பண் போடு, 'ஆதரித்தவர்கள்' அதை சகித்துக்கொண்டார்கள் என்றே வைத்துக்கொள்வோம். அதைத் தொடர்ந்து செயல்படும் முறை எப்படி இருக்கவேண்டும்? தாங்கள் அவரை ஆதரிப்பதை அல்லது அன்பு காட்டுவதை, வேறு யாரும் பயன்படுத்திக் கொள்ளாதவாறு நடந்துகோள்ளவேண்டும். விவேக முள்ளவர்கள் அப்படித்தான் முடிவு கட்டுவார்கள்.

ஆனுல், குடியேற்றத்தில் அவரை, விழுந்து விழுந்து ஆத ரித்த திராவிட கழகம், அதைத் தொடர்ந்து செயல்படுமுறை எப்படி இருக்கிறது? "சிறிதுகூட விவேக மற்றது" என்றுதான் கூறவேண் டும். இதிலே அண்ணு எவ்வளவு எச்சரிக்கையாக - நிதானமாக - நடந்து கொண்டார் என்பதையும் எண்ணிப்பார்க்கத்தான் வேண்டும். குடியேற்றம் தேர்தல்பற்றி அவர் கருத்துரை தரவேயில்லை. இது போன்ற நேரங்களில்எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ, அப்படி நடந்து கொண்டார். அதோடு காம ராசரின் வெற்றியைத் 'தனது' வெற்றியாக அவர் கொண்டாடவும் இல்லை. அந்தப் 'பெருமை'யை தேவைபட்டவர்கள் எடுத்துக்கொள் ளட்டும் என்று விட்டுவிட்டார். இப்போது உபதேர்தல்களி லும் அதே முடிவு செய்துள்ளார். இதனுல் ஏற்படும் பலன் என்ன என்பது இப்போது தெரியாது; நாளாக ஆகப் புரியும். நல்ல அர சியல்வாதிகளுக்கு, தினசரி சில் லறை வெற்றிகளும், திடீர் தோல்வி களும் கிடைப்பதில்லை. செயலற்றுக் கிடப்பதாக உலகின் கண்களில்பட்டு, அசைக்கமுடியாத வெற்றியை ஒரு நாள் அவர்கள் பெறுகிருர்கள்.

கம்யூனிஸ்டுகள், அண்ணுவிடம் வந்து ஆதரவுகேட்டார்கள், சென்ற பொதுத் தேர்தலில். "ஒரு ஒப்பந் தத்தின் மீதுதான் தரமுடியும்; இல்லையேல் இல்லை!" என்று கூறி விட்டார். அவர் கேட்ட ஒப்பந்தம் திராவிட நாட்டுப் பிரச்சினைக்கு உடனே வெற்றியைத் தேடித்தந்து விடும் என்பதல்ல, கேட்டதன் முழுப் பொருள். கம்யூனிஸ்ட் கட்சி, தன் கொள்கையையே வளைத்து வைக்க வேண்டிவரும் என்பதும், அப்படி வளைத்துவைக்கப்பட்டால், வடக்குத் தொடர்பை கம்யூனிஸ்ட்கள்-இழக்க வேண்டி வரும் என்பதும், பிறகு கம்யூனிஸ்ட் கட்சி, தென்னுட்டைப் பொறுத்த அளவில் தென்னுட்டுக் கட்சியாகவே, தென்னுட்டுக்கும் பாடுபட வேண்டிய நிலை வரும் என்பதும் உள்ளார்ந்த பொருள் களாகும். பிரிவினையை எதிர்க்கும் அணியில், பிறகு அவர்கள் சேர முடியாது என்பதும் கருத்தாகும். சேர்ந்தால், கம்யூனிஸ்ட் கட்சியின் நாணயத்தில் மக்கள் நம்பிக்கை இழப்பார்கள்; கம்யூனிஸ்ட் கட்சி உருக்குலைந்து போகும் என்பதும் அந்த நிபந்தனை, வெளிக்குக் கூருத ஒரு பிரிவாகும். கையெழுத் துப் போட்டுவிட்டால், ஒரு கட்சி மறு கட்சியின் கொள்கையை எழுத்து மூலம்ஏற்றுக்கொண்டுவிட் டால் பிறகுஅதை மாற்றிக்கொண்டு வாதிடுவது, அந்தக் கட்சியின் செல்வாக்கை பெரும் பகுதி குறைத்துவிடும் என்பது யாரும் மறுக்கமுடியாத உண்மையாகும். ஒரு ராமசாமிப் படையாச்சிக்கும் மாணிக்கவேலருக்கும் அது சுலப

மாற்றம்' சுலபமானதல்ல. அத ஞல்தான் கம்யூனிஸ்ட்களும் அந் தக் கோரிக்கைக்கு இணங்கவில்லை. சுருக்கமாக, ஒப்பந்தம் கேட்டது, எதிர்ப்பிலிருந்து அவர்களைக் கட்டுப்படுத்தத்தான். கம்யூனிஸ்ட் கள் ஏற்க மறுத்தார்கள், ஒப்பந் தத்தை. அண்ணுவும் தூரத்திலே யே நின்றுவிட்டார். அதனுல் நம்மை விளையாட்டுப் பொம்மை யாக்கி விளையாட நினைத்த கம்யூ னிஸ்ட்களுக்கு அது வாய்க்காமல் போனதோடு, நம்முடைய நமது பொதுச் செயலாளருடைய - ராச தந்திரத்திற்கு மதிப்பளிக்கும் சூழ் நிலையும் எற்பட்டது. கம்யூனிஸ்ட் கள், வெளிக்கு மரியாதைகாட்டா விட்டாலும், நினைக்காமலா இருந் திருப்பார்கள்!

ஆனுல், அதே நேரத்தில், திரா விட கழகம் ஓடி ஓடிப்போய் கம்யூ னிஸ்ட் கட்சியை ஆதரித்தது. ஆதரிக்காத நம்மையும் 'பூர்ஷு வாக்களாக்கித்' திட்டிற்று. 'அதோ பாரீர்' தீராதி தீரர்களாம், சூராதி சூரர்களாம், தியாகச் சின்னங் களாம் கம்யூனிஸ்ட்களை, கண்ணீர்த் துளிகள் ஆதரிக்கவில்லை. தியாகத் திற்கு மதிப்பளித்து, நாங்கள் ஆதரிக்கிருேம்" என்றெல்லாம் முழங்கிற்று. பெரியார், ஒரு இடத் தில், "கம்யூனிஸ்ட்கள் ஆட்சிக்கு வருவதானுல், திராவிடநாடுகூடத் தேவையில்லை!" என்று தன்னை மறந்து பேசினுர். என்ன ஆயிற்று! காலம் அப்படியேவா போய்க் கொண்டிருந்தது? ஒரு சில தினங் களுக்குள்ளேயே, கம்யூனிஸ்ட்கள் துரோகிகள்! அவர்களை ஒழிப்பதே என் முதற் பணி," என்று பதற வேண்டிய நிலை வந்தது. அந்த இக்கட்டான நிலை தி. மு. க. வுக்கு வராததற்குக் காரணம், அதன் பொதுச் செயலாளர், எப்போதும் எச்சரிக்கையோடும் நிதானத்தோ டும் செயல்புரிவதுதான்! ஆட்களை யும் கட்சிகளையும் எடைபோட்டுத் தொடர்பு கொள்வதுதான்!

காமராசர் ஆட்சிக்காலம் வரை அவரிடம் அன்பு செலுத்திக் கொண்டே இருக்க திராவிட கழகம் தீர்மானித்து, அதற்காக பிரிவினைக் கொள்கையை ஒத்திப்போடத் தீர் மானித்தால்கூட நமக்குக் கவலை இல்லை. ஆனுல், "பெரியாரே காம ராசரை மதிக்கிருரே, அவர் பின் னுலேயே போகிருரே, அப்படியா னுல் தி. கழகத்தைக் காட்டிலும் காங்கிரசே சிறந்தது," என்று தி. க. தோழர்கள் கருதி, பெரி யாரைத் தனியாக விட்டு விட்டு, குரு சாமியைத் துணைக்கு வைத்துவிட்டு, காங்கிரசைத் தேடிப் போய்விடாமல் இருக்கவேண்டும்; அவ்வளவுதான்! "போனுலும் கவலை இல்லை; நானும் போகிறேன்!" என்றுதான் பெரியார் சொல்லுவார், நாம் எதிர்க்கிருேம் என்பதற்காக! அப் போது பேச்சே இல்லை! யாரும் பேச முடியாது! திராவிட கழகம் காங் கிரசோடு ஐக்கியமாகிவிட்டதாக முடி வாகிவிடும்! இந்த நிலை ஏற்படவே ஏற்படாது என்று நிச்சயமாகக் கூற முடியுமா? கம்யூனிஸ்ட்களை பெரி யார் ஆதரித்தபோது, எத்தனை தி. க. தோழர்கள் கம்யூனிஸ்ட் களாகிவிட்டார்கள் என்பது பெரி யாருக்குத் தெரியாததல்லவே! காரணம் என்ன? நம்மை நாமே பலவீனர்களாகக் காட்டிக்கொள் வதுதான்!

இப்படிப் போய்விடுவார்களே என்பதற்காக, ஒரு "நல்லவ"ரை ஆதரிக்கக்கூடாது என்றும் நாம் கூறவில்லை. நமது கொள்கையைக் காட்டிலும் 'நல்லவரே' பெரியவர் என்று நாமே போய்க்கூறுகிருேமே அந்தப் பரிதாப நிலையைத்தான்

இராமன் வணங்கத்தக்கவனா?

ஆண்டவனா இவன்!

சீதை எவ்விதம் நெறிதவறியவள் என்பதைக் கண்டோம். இனி, இமயத்தின் அடிவாரத்தில் இருந்து இராமேசுவரம் வரையில் கோயிலும், குளமும் கொண்டு அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டு, ஏற்றி போற்றி தொழப்படும் இராமன் இவைகளுக்கு எல்லாம் தகுதி வாய்ந்தவன்தானா? வணங்கத் தக்க உத்தம பண்புகள் படைத்தவன்தானா? என்பதை நாம் ஆராயப்புகுங்கால், வால்மீகி தனது காவியத்தில் இராமனை இழிகுணமும், பழிசொல்லும் படைத்த தீயனாய் சூதும் வாதும் கொண்ட பொய்யனாய், உள்ளொன்றுவைத்து புறமொன்று பேசும் புல்லனாய், களத்திலே கண்ணீர் பெருக்கும் கோழையாய், வஞ்ச நெஞ்சம் கொண்ட பழிக்கஞ்சா பாதக கொலைகாரனாய், குடிவெறியனாய் காமந்தகாரனாய் சித்தரித்திருப்பதையே காண்கின்றோம்.

இராமனை வணங்குபவர்கள், பாராட்டுபவர்கள், பின்பற்றுவோர் ஏற்றி துதிபாடுவோர் அனைவரும் இராமனை சத்தியசீலன் என வாய்கூசாது கூறுகின்றனர். அதற்கு எடுத்துக் காட்டாக தந்தையின் கட்டளையை சிரமேல் ஏற்று, மணிமுடிதுறந்து மாளிகை வாசம் விட்டு, போக பாக்கியங்களை மறந்து, பட்டத்தை பரதனுக்கு ஈந்தவனாய் முழுமனதோடு, அன்றலர்ந்த செந்தாமரை முகத்தினனாய் வெங்கொடுமையும், கடும்புலியும் உறையும் கானகத்திற்கு காகுத்தன் சென்றானே இவனன்றோ உத்தமன், தந்தைசொல் தட்டாத சற்புத்திரன்என்றுகூறுவர். மகிழ்ச்சிப் பெருக்கால் கூவுவர்.

இது எந்த அளவிற்கு உண்மை, இராமன் உண்மையிலேயே தந்தை சொல்லை தட்டக்கூடாது என்பதற்காக காடு சென்றானா? அவ்விதம் நாடுவிட்டு காடு சென்றபோது மகிழ்ச்சியோடு மனக்குறையற்று சென்றதாக கம்பரடிப்பொடி ஆழ்வார்கள் பறைசாற்றுவது உண்மையா? தனக்குப் பதில் பரதன் ஆட்சி செலுத்தப் போவதைக் குறித்து பொறாமை கொள்ளாமல் இராமன் தாமரை இலைதண்ணீர்போல பற்றற்று விளங்கினானா? என்பவைகளை இப்பொழுது ஆராய்வோம்.

பட்டாபிஷேகத்திற்கு தயாராக இருந்த இராமன் தசரதரால் அழைக்கப்பட்டு காட்டிற்கு செல்ல வேண்டும் என்ற முடிவை கைகேயினின் மூலம் தெரிந்துகொண்டு சீதையிடம் திரும்பி வருகின்றான். அப்பொழுது அண்ணலின் கோலம் எப்படி இருந்தது என்பதை வால்மீகி கூறுகின்றான்.

அயோத்தியாகாண்டம் சருக்கம் 26 சுலோகம் 5

அப்பொழுது சீதாபிராட்டியார், ஆசனத்தில் இருந்து எழுந்து, அந்த கணவரை சிந்தையால் கலங்கிய **இந்திரியங்களை உடையவராய் மனவேதனையால் திருமேனி ஒளி குன்றி** இருக்கப் பெற்றவராய் கவனித்தாள். அதனால் மனக் கலக்கமுற்றாள்.

சுலோகம் 6.

அந்த ஸ்ரீராமர் அவளை எதிரில் கண்டதும் சுழன்றுகொண்டிருந்த **அந்த கவலையை வெளிக்காட்டாத படி உள்ளடக்க முடியாதவராக இருந்தனர். சிந்தையில் ஏதோ ஒன்று வாட்டி வருகின்றது** என்பவைகளை வெளிக்காட்டும் தன்மைகளை அடைந்துவிட்டார்.

சுலோகம் 7.

திருமுக மண்டலத்தில் சாந்தி குன்றப் பெற்றிருக்கின்றவராயும் கவனித்து அவள் மனவேதனையால் தளர்ச்சி அடையபெற்றவளாகி அவரைப் பார்த்து இதென்ன கோலம் என்றாள்.

தசாதன் நாசமாய் போக!

மும்மலங்களுக்கும், ஐம்புலன்களுக்கும் எட்டாத நிர்மலனாய், வையம், வெளி, நீர் இவைகளில் நிறைந்து, பிணி, மூப்பு சாவுகளில்லாது ஆக்கலுக்கும் அழித்தலுக்கும் அப்பாற்பட்டு, பாசபந்தங்களை அறுத்தவராய், தூணிலும் துரும்பிலும், அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருப்பதாக பக்த கோடிகளால் போற்றப்படும், எம்பெருமான் மகாவிஷ்ணுவின் திரு அவதாரமாகிய இராமனுக்கு, அரண்மனை வாசம்விட்டு ஆரண்யம் செல்லவேண்டும் என்றதுமே சிந்தை கலங்குகின்றது, கவலை மேலிடுகிறது, இந்திரியங்கள் செயலற்றுப் போகின்றன. முகம் மங்குகின்றது, சினம் பொங்குகின்றது, மனதை கவலை அரிக்க மேனி கறுத்துவிடுகின்றதாம். ஐயோ பாவம் அம்மையார் தேற்றவேண்டிய பரிதாப நிலை. இந்த நிலைமையில் சாதாரண மக்களைப் பார்த்து, மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை இவைகளை விடு என்ற பிரச்சாரத்தில் பக்தகோடிகள் கிளம்பிவிடுகின்றார்கள். கேவலம் அரசபீடம் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் உள்ளம் உடைந்துபோகும் இராமன் ஒரு கடவுளாக இருக்க முடியுமா? வேண்டுமானால் மந்திரி பதவி போனவுடன் மனம் கலங்கி வயிறெரிந்து சாபமிடும் ஆச்சாரியார் போன்றவர்களுக்கு இராமன் கடவுளாக தென்படலாம்?

இதோடு மட்டுமல்ல, இராமன் நிற்பது. புழுங்கி, பொறாமையால் துடித்து இராமன், பரதனை நிந்திக்க வேறு கிளம்பிவிடுகின்றான். அதுவும் எப்பேற்பட்ட பரதனை! அண்ணன் காட்டிற்கு அனுப்பப் பட்டான். அதுவும் தனது தாயால் என்பதை அறிந்தவுடன் பொங்கி எழுந்து புயலெனசீறி புலியெனப் பாய்ந்து, கைகேயியை கடிந்துரைத்து, தாயைக் கொல்லவே துணிகின்ற உத்தமனும் பரதனை, இராமன் இகழ்ந்துரைக்கின்றான். பரதன் தனது தாயிடம் எவ்வாறு சினந்து பேசுகின்றான் என்பதை பாருங்கள்.

சருக்கம் 73 சுலோகம் 6 அயோத்தியா காண்டம்.

ப. நெடுமாறன்

பத்தினிமார்களில் துஷ்டையே, கழுத்தில் சுருக்கிட்டாவது, அல்லது விஷத்தை குடித்தாவது, ஜலத்திலோ, அக்னியிலோ புகுந்து உயிரை ஒழி.

சுலோகம் 7.

இளைய சகோதரனாகிய பரதன், மாதாவைக் கொன்றவன் என்கிறதாக இராமனுக்கு, நானே தீங்கு விளைக்கின்றேன் என்பது இல்லாத பட்சத்தில் இப்பொழுதே உன்னை கொன்றுவிடுவேன்.

இவ்வாறு தனக்கு முடிசூட்ட விரும்பிய தாயை இகழ்ந்து, மந்திரிகளால் அளிக்கப்பட்ட மணிமுடியை உதறித்தள்ளிய உத்தமனும் பரதனை, தன்னைத் தேடிவந்துமீண்டும் அயோத்தி மன்னவனாக அரசாளு என்று அழைத்த தியாகசீலனை, பதினான்கு வருடங்கள் பாதுகைகளை வைத்து பக்தியாய்ப் பூஜித்து, விரதங் காத்து, இரமன் திரும்பிய

சண்டாளி சதி செய்துவிட்டாயே!

உடன் அரசை ஒப்புவித்த பரதனை இராமன் நன்றியறிதல் சற்றும் இல்லாது கண்டபடி பேசுகின்றான். ஏசுகின்றான். முக்காலம் உணர்ந்த கடவுளாம் இராமனுக்கு பரதன் எப்படிப்பட்டவன் என்பது ஏன் தெரியாமல் போயிற்று? அல்லது ஆசை கண்களை கட்டியதால் அறிவிழந்து போனானா?

இராமனது கேவலப்புத்தியை பாருங்கள். சீதைதானும் கானகம் வருவேன் என்று கூறுகின்றாள். அப்பொழுது அதை மறுத்த இராமன் குத்தலும் கோபமும் கலந்த கிண்டல் மொழி பேசுகின்றான்.

ஐயோ நான் பேடியாமே!

சருக்கம் 26 சுலோகம் 24

விசேஷ செல்வத்தை அடைந்து மேம்பாடான பதவியுள்ள புருஷர்கள் பிறருடைய துதியை பொறுத்திரார்கள். ஆனபடியால் பரதனுடைய முன்னிலையில் உன்னால் எனது குணங்கள் எடுத்துரைக்க தக்கவைகளில்லை.

சுலோகம் 25

நீ விசேஷமாய் எல்லா சமயங்களிலும் அவனால் மனோரதங்களைப் பெற உரிமை பெற்றவளாக ஆகமாட்டாய். அவன் முன்னிலையில் மனங்கோணாது நடக்குந்தன்மை கொண்டு நடக்க வேண்டியது.

சுலேகேம் 33

பரதனுக்கு விருப்பமில்லாதது எதையும் ஒருபொழுதும் செய்யக் கூடாது. ஏனெனில் அவன்தான் தேசத்திற்கும், குலத்திற்கும், நியமனங்கள் அளிக்க அதிகாரமுடைய அரசன்.

எவ்வளவு கேவலமான மனப்பான்மை பாருங்கள். "சீதாய்! பரதனே அரசாளப் போகின்றவன். அவன் மனங்கோணாது இங்கிதம் அறிந்து நடந்துகொள். அவன் முன்னிலையில் என்னைப்பற்றிப் பேசாதே. அவன் அதை பொறுக்க மாட்டான். எனவே, அவனுக்கு விருப்பமில்லாதது எதையும் செய்யாதே!" இவ்விதம் இராமன் தனது தர்ம பத்தினியைப் பார்த்து மங்கையே! மாற்றான் மனங்கோணாமல் நடந்துகொள் எனக் கூறுகின்றான். இது ஆரியர் தம் சீரிய நாகரீகம் போலும்! பரதனைப்பற்றி எவ்வளவு மட்டமான மனப்பான்மை இராமனுக்கு இருந்திருக்கவேண்டும்.

அடுத்தாற்போல இலக்குவன் தானும் கானகம் வருவதாகக் கூறும்பொழுது அவனைப் பார்த்து பின்வருமாறு கூறுகின்றான்.

சருக்கம் 26 சுலோகம் 33 அயோ தியா காண்டம்.

பரதன் ராஜ்யத்தை அடைந்து கைகேயி அம்மாளுக்கு வசப்பட்டு நடப்பவனாய் ... துயரடைந்து இருக்கும் கோசலையாரையும் சுமத்திரையையும் நெஞ்சாலும் நினையான்.

தம்பி இலட்சுமணா, பரதன் அரசனாகிவிட்டால் கோசலையையும், சுமத்திரையையும் கவனிக்கமாட்டான். எனவே நீ வரவேண்டாம். இங்கிருந்துகொண்டு அவர்களைக் காப்பாற்று என்று இராமன் ஆராய்ந்தறியாது புறங்கூறும் கயவனாகக் காட்சியளிக்கின்றான். சாதாரண கீழ்க் குணமுடையவன் கொள்ளக் கூடிய சந்தேகமும், பொறாமையும் இராமனிடம் இருந்திருக்கின்றன. முக்காலமும் உணரும் சக்தி படைத்த கடவுளாம் இராமனுக்கு பரதனை உணரும் சக்தி ஏனோ உண்டாகவில்லை? பரதனை இகழ்ந்துரைப்பதின்மூலம் தனது ஆத்திரத்தை ஒருவாறு தணித்துக் கொள்ளவே இராமன் இவ்விதமெல்லாம் புலம்புகின்றான்.

இவன்தான் இப்படி என்றால் இவனுக்கு வாய்த்த தம்பியான இலட்சுமணன் அண்ணனைவிட பன்மடங்கு அவசரபுத்தி படைத்தவனாக இருக்கின்றான். "அண்ணா, அனுமதி தருக. இந்தப் பரதனையும், கைகேயியையும் தீர்த்துக் கட்டிவிட்டு, உங்களுக்கு முடிசூட்டி வைக்கிறேன் என ஆவேசம் கொண்டு அலறுகின்றான். இந்த அறியாமை நிரம்பிய அசடனாம் இலட்சுமணன் மகாவிஷ்ணுவின் ஒரு கூறாம். ஒரு பாதியே இப்படி இருந்தால் முழு மகாவிஷ்ணு எவ்விதம் இருந்திருக்கவேண்டும், பக்தர்கள் தீர்மானித்துக்கொள்வார்களாக.

இந்த அவதார புருஷனாகிய இராமன்தான் ஆராய்ந்தறியும் ஆற்றலற்றவனாக, ஆத்திரத்திற்கு அடிமைப்பட்டவனாக இருக்கிறான் என்றால், இவனைப் பெற்ற கோசலை,

காவியுடையில் காமுகன் !

அவள்தான் - தேவமாதா - அந்த மாதாவிற்குக்கூட வயிற்றெரிச்சல் பொங்கி வழிகின்றது. தணிக்க வழியில்லாது தவியாய் தவிக்கின்றாள். என்னவெல்லாமோ சொல்லி புலம்புகின்றாள். இவள் இப்படி புலம்பும் நேரத்தில், தன்னை பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த கைகேயியை உதறித்தள்ளிவிட்டு தனது பெரியம்மாவைக் காண, கண்டு பணிய, பணிந்து ஆறுதலும் தேறுதலும் கூற, விழிகளில் நீர் அருவியெனப் பெருக வருகின்றான் பரதன். வருபவன் இருக்கும் ...ரபக் கோலத்தைக்கூட கவனி

யாது அம்மையார் ஆரம்பித்து விடுகின்றார்கள் வசவு புராணத்தை.

சருக்கம் 75 சுலோகம் 11 அயோத்தியாகாண்டம்.

கைகேயினால் கொடிய தொழிலால் ... **ஜ்யத்தில் ஆசைகொண்ட** உன ... கொடுக்கப்பட்டதாகிய ராஜ்யமானது ...டுதியில் இப்பொழுது கிடைத்தது. என்ன ஆச்சரியம் !

இவ்வாறு பல கொடிய நிந்தனை மொழிகளை உதிர்க்கின்றாள் கோசலை. இராமனின் தாய் அல்லவா? வேறு என்ன பேசுவாள். அவள் அவ்விதம் அபாண்டமாகப் பேசுவதைக் கண்ட பரதன் அனலில் இட்ட புழுவெனத் துடிக்கின்றான்.

மரத்தடி மகாராசா !

சுலோகம் 17.

புண்ணில் ஊசியால் குத்தியது போல மேற்கண்ட வண்ணமாக **பல நிஷ்டுர சொற்களால்** மிகவும் இகழ்ந்து பேசப்பட்ட பாபரஹிதராகிய பரதர் மிகவும் துயருற்றார்.

பின் இருக்காதா துன்பம் ! பாம்பிற்கு பால் வார்க்கச் சென்றவன், பாம்பால் கடியுண்ட கதையாக பரதன் கதை நடக்கிறது. இவ்வாறு கோசலையால் கடிந்துரைக்கப்பட்ட பரதன் பல கடும் சபதங்களைச் செய்கின்றான். அயோத்தியாகாண்டம் சருக்கம் 73 ல் சுலோகம் 20 ல் இருந்து 38-வது சுலோகம் வரை பரதன் பலவகையான பாவங்களை எடுத்துக்கூறி, இராமனுக்குதான் உண்மையில் துரோகமிழைத்தவனாக இருந்தால் இந்த பாவங்களுக்கெல்லாம் ஆளாவேனாக என்று கூறிய பிறகுதான் அம்மையாருக்குச் சாந்தி பிறக்கின்றது.

இது இங்கே இப்படி நடக்க, காடு சென்ற இராமன் முதல் இரவை எப்படி வேதனை ததும்பும் நெஞ்சத்தோடு கழிக்கின்றான் என்பதைக் கவனியுங்கள். தம்பியும் தாரமும் அருகிலிருக்க ஆலமரத்தடியில் தனியாக விடப்பட்ட இராமனுக்கு மாளிகை வாசமும், மனோகரம் தரும் போக பாக்கியங்களும் நினைவில் எழுகின்றது. உடனே துக்கம் நெஞ்சை அடைக்க மரவுரிதரித்து மரத்தடியில் கிடக்கும் தற்போதைய நிலையை எண்ணுகின்றான். துயர் பெருக கலங்கிய கண்களுடன் கேட்கின்றான்.

சருக்கம் 53 சுலோகம் 10 அயோத்தியாகாண்டம்.

லட்சுமணா, **பெற்ற தகப்பனாகவும், மானிடனாகவும் தர்மம் இன்னதென்றே அறியாதவனுமாகிய சாதாரணமான ஒருவன்,** யாவருடைய மனங்கோணாத அனுஷ்டானமுடைய **என்னைப் போன்ற உத்தம புதல்வனை இல்லாளுக்காக என்றாலும் காட்டிற்கு ஓட்டியாவிடுவான் ?**

கேட்டீர்களா, இராமன் பிரலாபத்தை. "தம்பி இலட்சுமணா எவ்வளவு கொடிய தந்தையாக இருந்தாலும், மனைவி கூறினாள் என்பதற்காக என்போன்ற உத்தமமான புதல்வனை காட்டிற்கு ஓட்டியா விடுவான்." மும்மலங்களையும் அறுத்தெறிந்த நிர்மலனான மகாவிஷ்ணு ஏங்கித் தவிப்பதைப் பாருங்கள். தனக்குத்தானே உத்தமப் பட்டம் சூட்டிக்கொண்டு தன் தந்தையை இகழ்கின்றான் இராமன். இத்தோடு நிறுத்துகின்றானா? தான் ஆரண்யத்தில், ஆண்டிக்கோலத்தில் கிடப்பதையும், பரதன் அரசோச்சப் போவதையும் எண்ணியவுடன் இராமனது உள்ளம் பொறாமையால் ஏங்கித் தவிக்கின்றது. பொறாமை பிடியை உந்தித்தள்ள இராமன், பரதன் மட்டும் வாழ்ந்துவிடுவானோ என கேவலமாகப் பேசுகின்றான்.

சுலோகம் 11.

தர்மபத்தினி சகிதம் உற்சாகமாக இருந்தவனாகிய எவனோ அந்த கைகேயி தேவியாரின் திருக்குமாரனாகிய பரதன், தனியாய் நம்முடைய உதவியில்லாது, சக்கரவர்த்தியாய், உற்சாகமாக விளங்கும் கோசல தேசங்களை எப்படி பாதுகாக்கப் போகின்றான்.

சுலோகம் 12.

தந்தையார் காலதசையால் பரமபதம் அடைந்துவிடுகின்றார் என்றால், நானும் காட்டில் வசித்துக் கொண்டிருக்கின்றமையால் ராஜ்ய பரிபாலனத்தை அவன் தனியாய் வகித்து செய்யவேண்டியிருப்பதை அடையப்போகின்றான்.

பாருங்கள். காகுத்தனது கயமைத்தனத்தை! இவன் காட்டிற்கு வந்துவிட்டதால், இவன் உதவியில்லாமல் பரதன் எப்படி அரசாண்டு விடப்போகின்றான்? அதையும் பார்த்துவிடுகின்றேன் என சந்துமுனை சிந்துபாடும் பேடியைப் போலப் பேசுகின்றான் கடவுள் என தொழப்படும் இராமன்.

இதோடுமட்டுமா! இலட்சுமணனை வேறு தூண்டி விடுவதைப்போலப் பேசுகின்றான்.

சுலோகம் 15

கைகேயி தேவியார் இப்பொழுது மனோரதங்கள் எல்லாம் கைகூடப் பெற்றதால் உற்சாகமடைந்து கோசலையையும், சுமத்திரையையும் என்னைச் சேர்ந்தவர்கள் என்கிற காரணத்தால் **ஊரைவிட்டாவது துரத்தாமல் இருப்பாளோ என்னவோ?**

சுலோகம் 16.

என்பொருட்டு சுமத்திராதேவியார் கஷ்டத்தை அனுபவிக்கக் கூடாது. இலட்சுமணா, இங்கிருந்து நீ சூர்யோதயத்தில் அயோத்திக்கே போய்ச் சேருவாயாக.



அட பரிதாபமே !

அப்பா! இலட்சுமணா, நான்தான் காட்டிற்கு வந்து கஷ்டம் அனுபவிக்கின்றேன். என்பொருட்டு கோசலையையும் சுமத்திரையையும் துன்பம் அனுபவிக்க விட்டுவிடக் கூடாது. அதுவும் முக்கியமாக உனது தாயாகிய சுமத்திரை துன்பம் அனுபவிப்பதை என்னால் பொறுக்கமுடியாது. உடனே நீ அயோத்தி சென்று அவர்களைப் பாதுகாப்பாயாக." என்று கூறுகின்றான். எவ்வளவு கருணை பாருங்கள் இராமனுக்கு. பந்தபாசங்களை அறுத்தெறிந்த கடவுளாக கொள்ளப்படும் இராமனுக்கு, கேவலம் தாய் என்ற பாசத்தைக்கூட விட்டுவிடமுடியவில்லை. அதை வெளிப்படையாகக் கூற மனமின்றி இலக்குவனிடம் உனது தாய் துயருறுவதை என்னால் பொறுக்கமுடியாது. எனவே நீ சென்று அவர்களைக் காப்பாற்று என கூறுகின்றான். குள்ளநரித் தந்திரம் என்பார்களே அது இதுதான் போலும்.

இப்படியெல்லாம் பேசிப் பேசிப் பார்த்தும் இராமனது ஆத்திரம் தணியவில்லை. ஆ! ஊ! என கூச்சலிடுகின்றான்.



கோழையினும் கோழை !

சுலோகம் 25.

இலட்சுமணா! **நான் சினங்கொள்ளுவேன் ஆகில் ஒருவனாகவே நின்று, பாணங்களால் அயோத்தி மாநகரையும், பூமண்டலத்தையும் எனக்குச் சொந்தமானதாக ஆக்கிக்கொள்ளமுடியும்** என்றாலும் ஒருவனுக்குள்ள சக்தியை பிரயோஜனமற்றதாகிய விஷயத்தில் செலுத்திவிடக்கூடாது, என்ன?

சுலோகம் 26.

தோஷமற்ற லட்சுமணா, நான் **பரலோகத்தினுடைய அதர்மத்தால் விளையும் கஷ்ட நஷ்டங்களுக்கு பாத்திரனாகி விடுவேன் என்கிற அந்த ஒரு காரணத்தாலேயே இப்பொழுது பட்டாபிஷேகம் செய்துகொள்ளவில்லை.**

வாலியை மரத்தின்பின் மறைந்து நின்று பேடித்தனமாகத் தாக்கிக் கொலை செய்த கோழையினும் கோழையான இந்த இராமன் பேசுவதைக் கவனித்தீர்களா! அப்படியே அவன் செய்யக்கூடியவன் என்று வைத்துக்கொண்டாலும் தந்தை சொல் மீறாத தனயன், சத்தியசீலன் என்று இராமன் பெற்ற பட்டங்கள் என்ன ஆவது? தந்தை சொல்லை தட்டக்கூடாது என்பதற்காகவே காட்டிற்கு வந்தேன் என்று இராமன் கூறவில்லை. தனது வாயினாலேயே தனது உள்ளத்தை திறந்து காட்டிவிடுகின்றான் இராமன். பரலோகத்தில் அதாவது இறந்த பிறகு, மேலுலகில் அதர்மமாகவே நடந்தேன் என்பதற்காக தண்டிக்கப்படுவேன் என்று அஞ்சுகிறான்.

(தொடரும்)

இராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் – – – – கவனிப்பாரின்றி மறைந்த செல்வம்!

பெரிய குடும்பம், மூன்று சகோதரர்களின் குடும்பம். மூவர் குடும்பத்திலும் சேர்ந்து ஒன்பது குழந்தைகள். அதில் ஒரே ஒரு ஆண் குழந்தை-இளையவரின் குழந்தை. மற்ற எட்டும் பெண்கள். அந்த ஆண் குழந்தையை செல்வம் என்றுபெயரிட்டு செல்லமாகவளர்த்தார்கள். மூத்த சகோதரர்கள், கும்பகோணத்தில், திராவிட இயக்க ஆதரவாளர்கள்.

ஒரு நாள், 'பேதியாகிறது' என்று குழந்தையை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். கவனிக்க நாதியில்லை. கதறினார்கள்; பதில் சொல்வார் இல்லை. செல்வம் இறந்து விட்டான்! ஜெனரல் ஆஸ்பத்திரி பற்றிய தலையங்கம் கண்டு ஆத்திரப்பட்டுக் கடிதம் எழுதும் ஆஸ்பத்திரி நண்பர்களுக்கு-செல்வத்தின் படத்தைக் காணிக்கையாக்குகிறேன். ஒரு செல்வம்-பால் வடியும் பருவத்தினன்-நமது கண்களுக்குப் பட்டிருக்கிறான். நாம் அறியாமல் மாண்ட செல்வங்கள் எத்தனையோ!

கோபிக்கும் தோழர்களே! இறந்த செல்வமும் இயக்கப் பற்றுடைய குடும்பத்தில் பிறந்தவன் தான்-நம்மைப்போல! [ஆ-ர்]

சென்னை 16-1-55

இராயப்பேட்டை அரசியலார் மருத்துவமனை மேலாளர் அவர்களுக்கு.

ஐயா,

தங்கள் மேற்பார்வையின் கீழ் இயங்கும்இராயப்பேட்டைஅரசியலார் மருத்துவமனையில் நடந்த இந்த சம்பவத்தை தங்கள் கவனத்திற்கு கொண்டு வந்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

25-12-54 அன்று இரவு 2-15 மணிக்கு கடுமையான காய்ச்சலாலும், மூச்சடைப்பாலும் வேதனைப் பட்டுக் கொண்டிருந்த **செல்வம்** என்ற 5 வயதுச் சிறுவனை (S. தாண்டன் என்பவரின் மகன்) சிகிச்சைக்காக இராயப்பேட்டை மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். அங்கே எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். உள்ளே இருந்த டாக்டரின் அறைக்குச் சென்றேன். அங்கே அவர் கதவை அடைத்துவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். சுமார் பதினைந்து நிமிட நேரமாக 'ஐயா' 'ஐயா' என்று கதவைத் தட்டி அவரை எழுப்பினேன். சரியாக 2-30 மணிக்கு "என்ன" என்று எரிச்சலோடு கேட்டபடியே ஒரு இளம் டாக்டர் வந்தார். நான் நோயால் துடித்துக் கொண்டிருந்த குழந்தையைக்காட்டி, அதன் உடல் நிலையை விளக்கினேன்; நான் முழுவதையும் சொல்லி முடிப்பதற்குள், அவர் எதையோ எழுதிவிட்டு, குழந்தையை மருத்துவமனையில் சேர்த்துவிட்டுப்போகும்படி கூறினார். இருக்க இருக்க உடல்நிலை மோசமாகிக் கொண்டிருக்கும் அந்தக் குழந்தையை பரிசோதித்து உடனடியான நிவாரணம் செய்யும்படி வேண்டிக்கேட்டேன். எங்கள் மனச் சாந்திக்குக் கூட அவர் எதையும் செய்யாமல், காய்ச்சலால் கொதிப்பேறிப்போன அந்தக் குழந்தையின் முகத்தையும் ஏரெடுத்துப் பாராமல் 'என்னைத் தொந்தரவு' செய்ய வேண்டாம் என்று கூறிவிட்டு கதவை தாளிட்டு விட்டு படுக்கைக்குப் போய் விட்டார். பிறகு நான் அனுமதிச்சீட்டை எடுத்துக்கொண்டு நர்சை அணுகினேன். அந்த அம்மையார் குழந்தையைப் பார்த்துவிட்டு, "டாக்டர் ஊசி ஏதாவது போட்டாரா" என்றார். நான் 'இல்லை' என்றேன்.

உடனே நர்ஸ் டாக்டர் தூங்கிக் கொண்டிருந்த அறைக்குச் சென்று 'குழந்தைக்கு ஏதாவது ஊசி போடும்படி கேட்டார்'

மீண்டும் அந்த டாக்டர் 'யூனிட்டிற்குத் தகவல் அனுப்புங்கள்' என்று கூறிவிட்டு பேசாமல் இருந்தார். உடனே அந்த நர்ஸ் குறிப்பேட்டில் எதையோ குறித்து வேலைக்காரன்மூலம் அனுப்பிவிட்டு நீங்கள் வீட்டிற்குப் போகலாம் என்றார்.

2-15க்கு நான் குழந்தையை இங்கு கொண்டுவந்தேன். இப்பொழுது மணி 2-35 ஆகிறது, குழந்தையின் நிலையோ மோசமாகிக் கொண்டே வருகிறது! யாரும் கவனிக்க வில்லை; எல்லோரும் அலட்சியமாக இருக்கிறீர்கள். நான் குழந்தையை ஜெனரல் ஆஸ்பத்திரிக்காவது எடுத்துச் செல்லுகிறேன்,அனுமதியுங்கள் என்றேன். அதற்கு நர்ஸ் மறுத்து விட்டு, டாக்டர் இப்பொழுது வந்து குழந்தையை கவனிப்பார் என்று கூறினார். காத்திருந்தோம். குழந்தையின் நிலைமோசமாகி விட்டது. நம்பிக்கை இழந்தோம். சரியாக 2-55க்கு செல்வம் இறந்துபோனான். செத்த பிறகு சிகிச்சை செய்ய டாக்டர் வந்தார். அவரைப் பார்த்த நர்ஸ் குழந்தை இறந்துவிட்டது என்று கூறினார்.

குழந்தைக்கு உயிர் கொடுக்க டாக்டர்கள் கடவுள் அவதாரம் என்று நான் கூறவில்லை. என் வருத்தமெல்லாம் இதுதான்; நான் குழந்தையை எடுத்துச் செல்லும் போது பொறுப்பிலிருந்த டாக்டர் மிக மிக அலட்சியமாக நடந்து கொண்டார். பெற்ற நெஞ்சங்களின் மனச் சாந்திக்குக்கூட அவர் குழந்தையை பரிசோதித்துப் பார்க்கவில்லை.

அந்த நேரத்தில் பொறுப்பிலிருந்தவர் **சேஷம்மாள்** என்ற உதவி லேடி டாக்டர் என்று மறுநாள் தெரிய வந்தது. அன்று பிணத்தை அப்புறப்படுத்தும்வரை அந்த அம்மையார் அங்கு காணப்படவில்லை.

இது சம்பந்தமாக விசாரணை நடத்தி, இனியாவது இத்தகைய சம்பவங்கள் தங்கள் மேலான நிர்வாகத்தின்கீழ் நடைபெறு வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுகிறேன்.

உண்மையுள்ள

ஏ. சுப்பிரமணிய தேசிகர்.

அன்பார்ந்த ஐயா,

வணக்கம். தங்களின் எண்ணம் 19-2-55 இதழில் சென்னை ஆஸ்பத்திரி குறித்து எழுதியுள்ளது தங்களின் எண்ணம் மட்டுமல்ல, இன்றைய நிலையில் பெரும்பாலான மக்களின் எண்ணம். அந்த நிலைமை சென்னையில் மட்டும் என்று எண்ணி விடாதீர்கள். இங்கும் ஆஸ்பத்திரியிலும் அதே நிலைமைதான். தெரிந்தோ, தெரியாமலோ காலஞ்சென்ற டாக்டர் ராஜன் ஆண் நர்சுகள் என்று என்றைக்கு விதைதூவினாரோ அன்று முதல், நோயாளிகளைக் கவனிக்காமல் காதல் களிகூடமாக ஆண் பெண் நர்சுகளுக்கு ஆஸ்பத்திரிகள் ஆகி விட்டதேயன்றி, நோயாளிகளை, அதுவும் இந்த ஆண் நர்சு புண்ணியாத்மாக்கள் நடத்தும் விதம் அவர்களுக்கு வெந்த புண்ணில் வேல் நுழைத்த வண்ணம் தான் உள்ளது. உங்கள் எண்ணம் வரவேற்கக் கூடியதே.

ஆர். நாகசுந்தரம்.

19-2-55. திருச்சி.

தென்றல், ஆசிரியர், கண்ணதாசன் அவர்களுக்கு எஸ். பாண்டியன் வரைவது. இப்பவும் வணக்கம் பல. தங்கள் தென்றல் இதழ் வாசகர்களில் நானும் ஒருவன். தென்றல். முதல் இதழ் முதல் இன்றுவரை படித்து வருகிறேன். சென்ற 19-2-55. தேதி தாங்கள் வெளியிட்ட, தலையங்கம்-எண்ணம்

(8-ம் பக்கம் பார்க்க)

வேலூர் அன்பர்களுக்கு

அறிவிப்பு

அன்புடையீர், வணக்கம். உங்கள் சௌகரியத்தை முன்னிட்டு கீழ்கண்ட பத்திரிகைகள் 1-3-55 முதல் வீட்டுக்குச் சந்தாவாக போடப்படும். தேவையானவர்கள் கீழ்கண்டவிலாசத்திற்கு தெரிவிக்கவும்.

வாரப் பத்திரிகை.	ரூ.	அ.
தென்றல்	0	2
கலைமன்றம்	0	4
இமயம்	0	4
கரும்பு	0	2
பேரிகை	0	2
கலாநிதி	0	2
REEL NEWS	0	4
CINE ADVANCE	0	2
மாதப் பத்திரிகை.		
காதல்	0	8
மர்மக் கதை	0	8
கலை அரங்கம்	0	8
தமிழன் குரல்	0	4
விந்தியா	0	4
மனிதன்	0	4
கலைக்கதிர்	0	8
தென்றல் திரை	0	4
பகுத்தறிவு	0	4
தெலுங்குப் பத்திரிகை.		
பிரஜர்மாதா	0	3
பிரேமா	0	8

ஏஜண்ட்:-

M. G. கேசவன்,

தோட்டப்பாளையம், வேலூர். N.A.

கீழ்க்கண்ட விலாசத்தில் தெரிவிக்கவும்:—

M. G. கேசவன்,

C-o சுப்பராயன் சைக்கில் ஷா

(இம்பீரியல் பேங்க் பக்கத்

வேலூர், N.A.

ஆயிரந்தீவு அங்கயற்கண்ணி

இரண்டாம் பாகம்

1

சாந்திமத்தீவில் தங்கமேனியர்!

கொந்தொளி மாடக் கொடுமுடி நீழல்
செந்தமிழ் நாட்டுச் சிறுவர்கள் கூடிப்
பந்தயங் கட்டிப் பலவகை யான
பந்துக ளாடிப் பயன்பெறு வாரே!
வாய்ந்த மறவர் வகைபட வெல்லாம்
ஆய்ந்து பயிற்ற வணிகமுற் செல்வர்
தீந்தமிழ் பாடிச் சினப்புலி போலப்
பாய்ந்து சிலம்பம் பயிலுவர் நாளும்!
செந்தமிழ் பாடித் தெரிவையர் கூடி
உந்தி பறந்துள் ளுவக்குவ ரோர்பால்
தெந்தன மென்னச் சிலம்பு புலம்பப்
பந்துக ளாடுவர் பாவைய ரோர்பால்!

—இராவண காவியம்

சாந்திமத் தீவு உற்சாகத்தில் மூழ்கியிருந்தபோது கமலினிமட்டும் கவலைத் தீயில் கருகிக்கொண்டிருந்தாள்......

அழகிய தென்னஞ்சோலைகளின் இடையே புகுந்துவரும் காலைக் கதிரொளி, கவிஞர்களின் மிகைபட்ட கற்பனையையும் உண்மையாக்கிக் கொண்டிருந்தது, அந்தத் தீவில். புள்ளினங்களின் ஒலியலைகள் புதிய சங்கீத முறை படைத்துக்கொண்டிருந்தன.

அந்த நேரத்தில், மங்கையும் குழுவினரும் கல கலப்போடு 'அன்னை மாளிகை' நோக்கி நடந்தனர். கடற்கரையிலிருந்து சுமார் ஒரு கல் உள்நோக்கி சென்றதும், அன்னையின் குழுவினரும் சாந்திமத்தீவின் பூர்வீக மக்களும்வாழும் நகர்ப்புறத்தைக் கண்டனர். "அன்னை காவிரி மணிப்பெயராணை!" என்ற பாடல் கூட்டுக்குரலில் கிளம்பிற்று! முக்கிய வீதியாம் 'சோழமாத்தெரு'வில் முதலில் நுழைந்தனர், மங்கையின் குழுவினர். அவர்களைக் கண்டதும் அந்தத் தெருவில் வசித்த மக்கள் அனைவரும் ஓடிப்போய் மலர் பறித்து வழிநெடுகத்தூவினர். உற்சாக வெள்ளம் அணைதப்பியது! நகரம், சோழன் தலைநகரைக் காட்டிலும் அழகியதாக இருந்தது. நந்தினி ஆச்சரியமாகப் பார்த்தபடியே நடந்தாள். தீவு என்றால், எப்படியிருக்கும் என்று அவள் மனதிலே இருந்த கற்பனையை, கண்கண்ட காட்சி சிதற அடித்துவிட்டது! "அடேயப்பா! இதுதான் தீவா!" என்று அதிசயித்தாள். சோழநாட்டைக் காட்டிலும் அழகு மங்கையர் அங்கே அதிகம் இருப்பதாக அவள் எண்ணமிட்டாள்! அவ்வளவுபேர் சாளரங்களை ஒவியக் கூடங்களாக்கிக்கொண்டிருந்தனர். கமலினி தன் நினைவின்றி நடைபோட்டுச் சென்றாள். மங்கை பெரிய கடமை ஒன்றை மனதில் தாங்கிச் சென்றுகொண்டிருந்தாள்.

தெருக்களில் கும்மியடிப்பாரும், தென்பாங்கு இசைப்பாரும், தொழில் புரியப் போவாரும் கூட்டம் கூட்டமாக நடந்துகொண்டிருந்தனர். மங்கையின் குழுவினரைக் கண்டதும் அவர்கள் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கலாயினர். சிலர் கைதட்டி வரவேற்றனர். இந்தச் செய்தியை அன்னை மாளிகைக்கு முதலிலேயே தெரிவித்துவிட, குதிரையின் மீதேறிப் பறந்தான், அந்தத் தீவைச்சேர்ந்த ஒரு வீரன்.

மங்கையின் காதலன் இவற்றையெல்லாம் கண்டும் காணாதவனாய், குழப்ப நிலையில் தொடர்ந்துகொண்டிருந்தான். ஒரு ரதத்தில் நந்தினியின் தந்தையின் பிணம், மூலிகைகளில் சுற்றப்பட்டு,வாழை இலைக்கட்டு வலம் வருவதுபோல் வந்துகொண்டிருந்தது.அந்த அழகிய நகரிலே புதிய உணர்ச்சியும் உத்வேகமும் காணப்பட்டன! வந்த வீரர்களிலே சிலருடைய குடும்பமும் அந்தத் தீவிலே வசித்துக்கொண்டிருந்தது. அவர்களுடைய மனைவிமக்கள், முன்னறிவிப்பு இல்லாமல் வந்து சேர்ந்த தங்கள் கணவன்மார்களை பார்ப்பதற்கு முண்டியடித்துக்கொண்டு முன் வந்தார்கள்.

அன்னையைப் பார்த்த பின்னரே கலைந்து செல்ல வேண்டுமென்ற நியதிப்படி அந்த வீரர்கள், தங்கள் வீடுகளுக்குச் செல்லாமல் அன்னை மாளிகையை நோக்கிச் சென்றனர்.

கம்பீரமான ஒரு மாளிகை, அடுக்கடுக்காகக் கட்டப்பட்டு, பளிங்குக் கற்களால் போர்த்தப்பட்டிருந்தது. அதன் முன் பகுதியில் மிகப்பெரிய தூண்கள் நிறுத்தப்பட்டிருந்தன. பளபளவென்று அவை ஒளி வீசிக்கொண்டிருந்தன. மார்பு அங்கியிலே புலிச்சின்னம் அணியப்பெற்று, கைகளிலே 'தாயகம் காப்போம்' என்று பச்சை குத்தப்பெற்று, வலக்கையிலே வேல் தாங்கி, முன்னும் பின்னுமாக நடந்துகொண்டிருந்தார்கள் காவற்காரர்கள்.

மாளிகையின் மேலே வழுவழுப்பான துணியொன்று புலிச்சின்னம் வரையப்பெற்று, பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தது. ஆம்! சோழன் கொடியையே தன் கொடியாகக் கொண்டிருந்தது அந்த மாளிகை. அங்கே பணிப்பெண்களும், நாட்டிய மங்கையரும், வீரர்களும், அறிஞர் பெருமக்களும் கவிவாணர்களும் வருவதும் போவதுமாக இருந்தனர்.

முதலாம் பராந்தகன் காலத்தில் வந்து குடியேறியவர்களின் பரம்பரை அவர்கள். கி. பி. 910-ல் பராந்தகன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து, மதுரையைக் கைக்கொண்டதும், மதுரையை ஆண்டுவந்த ராசசிம்மன் என்னும் பாண்டியன் தன் மணிமுடிகளுடனும், வேறுபல பொருள்களுடனும் இலங்கைக்கு ஓடிவிட்டான். அப்போது இலங்கையை ஆண்டுவந்த ஐந்தாம் காசிபன், இராசசிம்ம பாண்டியனுக்குத் துணையாக தக்க சேனுதிபதியின் தலைமையில் பெரும் படையொன்றை பாண்டிய நாட்டிற்கு அனுப்பினுன்.

மதுரைக்கு வந்து சேர்ந்த இலங்கைப் படைகள், அப்போது பராந்தகன் வசப்பட்டிருந்த மதுரையில் வாழ்ந்த சில வீரர்களை, தங்களோடு சேர்த்துக்கொண்டு, பராந்தகன்மீது போர் தொடுத்தன. வெள்ளூரில் நடந்த அந்தப் போரில் இராசசிம்மனின் ஆதரவாளர்களும், இலங்கைப் படையும் ஒருங்கே தோற்றன. அதிலும் பராந்தகனே வென்ருன்.

ஆயினும் இலங்கை அரசன் காசிபன் மீண்டும் மீண்டும் பராந்தகனுக்குத் தொல்லை கொடுத்து வந்தான், பாண்டியனுக்கு ஆதரவாக. இலங்கை அரசனது துணையால்தான் பாண்டியன் மீண்டும் மீண்டும் தொல்லை கொடுக்கிருன் என்று அறிந்த பராந்தகன்,நேரடியாக ஈழத்தின்மீது போர் தொடுத்து அதை வென்ருன். அதை யொட்டி அந்த வெற்றி விழாவைக் கொண்டாட, ஈழத்திற்குப் புறப்பட்டுச் சென்ற பல சோழ மக்களின் குடும்பங்கள், திரும்பி வரும்போது வீசிய பெரும் புயலினுல், திசை தப்பி சாந்திமத் தீவில் வந்திறங்கினர்.

அந்தத் தீவின் வளத்தையும், அது யாருடைய ஆளுகைக்கும் உட்பட்டு இல்லை என்பதையும் கண்ட அவர்கள் அந்தத் தீவிலேயே குடியேறி விட்டனர். அந்தத் தீவின் பூர்வீகக் குடிகளோடு ஒன்றுபட்டு

வருகிறது ! வருகிறது !

தமிழ் நாட்டுத் தம்பி தங்கைகளின் அபிமானம் பெற்ற ஒரே ஒரு பத்திரிகை !

சாக்லெட்

(மாதமிரு முறை)

1--4--55ல் வெளிவருகிறது.

★ மர்மம் நிறைந்த புதுமுறைக் கதைகள் !

★ தேன் சொட்டும் தொடர் கதை ... !

★ சுவைதரும் கட்டுரைகள் ... விஞ்ஞான ஆராய்ச்சிகள் !

★ பிரபல நாட்டுத் தலைவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் !

★ கலைஞர்களின் பிரத்தியேகப் பேட்டி !

★ குலுங்கச் சிரிக்கவைக்கும் ஹாஸ்யப்பகுதி ! விநோதச் செய்திகள் ... !

★ பயனுள்ள கேள்விகளுக்குச் சரியான என்பதில் !

இன்னும் பல பல !

சாக்லெட் ஒவ்வொரு இதழும் சிறந்த, புகழடைந்த அறிஞர்களைக் கொண்டு தயாராகிறது. மூவர்ண முகப்பு கொண்டது.

தனிப்பிரதி விலை 0—2—0

முன் பணம் கட்டும் ஏஜண்டுகள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

“ சாக்லெட் ”

119, பிராட்வே

சென்னை-1

கண்ணதாசன்

வாழ ஆரம்பித்தனர். அவர்களது பரம்பரையினர்தான் அன்னை மாளிகையில் பெரும் பங்குகொண்டவர்களாயிருந்தனர்.

அந்தத் தீவிலேயே அழகிய வேலைப்பாடமைந்த கட்டிடங்களைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தவர்கள் அவர்கள்தான். அவர்கள் சோழ நாட்டோடு ஓரளவுக்குத் தொடர்பு கொண்டுமிருந்தனர். ஆண்டுக்கு இருமுறை சாந்திமத் தீவிலிருந்து சோழநாட்டிற்குக் கலம் புறப்படும். சில காலங்களில் கொள்வினை கொடுப்பினைக்கும் சோழநாட்டிற்குச் சென்று வருவதுண்டு. ஆனுலும், அவர்கள் யாருடைய ஆளுகைக்கும் உட்படாத சாந்திமத்தீவின் குடிமக்களாகவேஇருந்தனர்.

அந்தத் தீவின் பூர்வீக மக்களும் தமிழை யொட்டிய ஒரு மொழியே பேசி வந்தனர். இவர்களது வருகைக்குப்பின் தமிழே தங்கள் தாய் மொழியாகக் கொண்டனர் அந்தப் பூர்வீகக் குடிகள்.

அதற்குப் பிறகு சுமார் 80 ஆண்டுகள் கழித்து, அந்தத் தீவு இராசராசன் கைக்கு வந்தது. வாழ்வோரும் சோழ மக்களே என்பதையறிந்த இராசராசன், அங்கு வாழ்ந்தோர்களையே அதை நிர்வகிக்கும்படி விட்டுவிட்டான். அதற்குப் பிறகுதான் அன்னை அங்கு வந்ததும், அவளை அன்னையாக அந்தத் தீவு மக்கள் ஏற்றுக் கொண்டதும்.

அந்த மாளிகைக்கு மங்கையும், குழுவினரும் வந்து சேர்ந்தனர். மங்கை மாளிகை முகப்பில் படிகளில் ஏறி நின்றுகொண்டாள். மற்ற பெண்களும், படைகளும் கீழே அணிவகுத்து நின்றனர். நந்தினி எங்கு நிற்பது என்று புரியாமல், மங்கையின் பக்கத்தில் போய் நின்ருள்.

மங்கை ‘அன்னை வாழ்க !’ என்று கூவினுள். படைகள் ஒரே குரலில் ‘வாழ்க ! வாழ்க !’ என்று கூவின. முரசுகள் முழங்கின. சங்கம் ஒலித்தது. மங்கையும் படைகளும் மௌனமாக நின்றனர். உள்ளிருந்து பன்னிரெண்டுவீரர்கள் ஆயுதபாணிகளாக, திரையை விலக்கி வெளிவந்து, மங்கையின் முன் நின்றனர்.

“ தாயின்மீது ஆணை !”

“ தமிழின்மீது ஆணை !”

“தாயகத்திற்கு நலமே புரிவீர்!”

“ அவ்வெண்ணம் கொண்டே இங்கு வந்தேன் !” என்று ஒரு வீரன் சொல்ல, அதையேமங்கையும் சொன்னுள். அந்த வீரர்கள் ஆறு, ஆறு பேராக இரண்டு பக்கமும் பிரிந்து நின்று கொண்டு மங்கைக்கு வழிவிட்டனர். அவளைத் தொடர்ந்து நந்தினியும் உள்ளே புகுந்தாள். பிறகு ஒவ்வொருவரின் ஆயுதங்களையும் கழற்றி வாங்கிக் கொண்டு, உள்ளே அனுமதித்தனர் வீரர்கள். மங்கையின் காதலன் மட்டும் புதுமுகமாயிருந்ததால் தடுத்து நிறுத்தி விட்டனர்.

நந்தினியின் தந்தையும், அன்னையின் கணவனுமான கணக்காயனின் பிணத்தை இரண்டு வீரர்கள் தூக்கிக்கொண்டு உள்ளே புகுந்தனர். உட்புறத்தில் தூண்களே இல்லாத ஒரு பெரிய, அழகிய மண்டபத்திற்கு அவர்கள் வந்தனர். பொன்மணி மாடம்போல் மின்னிக் கொண்டிருந்தது அந்த மண்டபம். வீர ஓவியங்கள் சுவற்றில் வரையப் பட்டிருந்தன.

நேர் எதிரே மெல்லிய துணியால் கட்டப்பட்டிருந்த அறை ஒன்று தெரிந்தது. ஆம்! அன்னை உட்கார்ந்திருந்த சிம்மாசனம்தான் துணியாலே மூடப்பட்டிருந்தது. வந்தவர்கள் அன்னையின் உருவை முழுக்கக் காண முடியாதவாறு அந்தத்துணி அடைத்துக் கொண்டிருந்தது. ஆயினும் கிரீடமணிந்த ஒரு மங்கை உள்ளே இருக்கிருள் என்பதை மட்டும் வந்தவர்கள் புரிந்துகொள்ள முடிந்தது.

“ அன்னை வாழ்க !” என்று மெல்லிய குரலில் கூட்டம் கூவி, வீரவணக்கம் செலுத்திற்று. மங்கை ஒரு அடி முன்னுல் போய் நின்று, அன்னையை வணங்கிப் பேசலானுள்.

‘ சோழமண்டலம் வாழ்வதாக! புலிக்கொடி தழைப்பதாக! கயமை கருகுவதாக! தாயகம் வாழ்வதாக அன்னையே! இட்டகடன் முடித்து திரும்பிவந்திருக்கும் எங்கள் செய்தியை தங்கள் திரு முன் படைக்கிறோம். வேண்டிய அளவு விபரம் தெரிந்து வந்துள்ளோம் என்பதையும் மகிழ்வோடு கூறிக்கொள்கிறோம். மாலைசூடி மகிழ்வித்து, மனம் நிறைந்த வாழ்வருளிய மணவாளனைப் பிரிந்து, பதினைந்து ஆண்டுகளாக தாயகப்பணி புரிந்து வரும் தங்கள் திரு முனம், துன்பமயமான ஒரு செய்தியைப் படைக்க வருந்துகிறோம்.

“தங்கள் மணவாளரும், எங்கள் தந்தையுமாகிய பெருமானைக் கொண்டு வந்துள்ளோம், அன்னையே! துன்பத்தைத் தாங்கிக் கொள்ள உங்கள் இதயத்தைக் கல்லாக்கிக் கொள்ளுங்கள். எதிர்பாராத எந்த நிகழ்ச்சியும் இதயத்திற்குப் பேரிடியாகும் என்பதால் நெஞ்சுரம் படைத்த தங்களையே இப்படி வேண்டிக்கொள்ள நேர்ந்தது.

“தங்கள் கணவர் இயற்கையாகவே மரணமெய்தி, பிணமாக உங்கள் முன் வந்துள்ளார்” என்று மங்கை துக்கத்தோடு நிறுத்தியதும் உள்ளே விம்மும் குரல் கேட்டது. ஆம்! அன்னை விம்மி விம்மி அழுதாள். அதைத் தொடர்ந்து கணக்காயன் பிணம் அன்னைமுன் கிடத்தப்பட்டது.

தொடர்ந்து பேசிய மங்கை, “அன்புக்குரிய தாயே! துன்பமயமாகஇருக்கும் உங்கள் இதயத்தில் தொடர்ந்து பிறக்கப் போகும் மகிழ்ச்சிக்கு தங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். தங்கள் அருமைச்செல்வி, பண்பு நிறைந்த பருவமங்கையாக இங்குவந்துள்ளாள். தங்களைக் காணும் ஆவலில் மிதந்தவளாக இருக்கிருள்” என்றதும், நந்தினி மண்டியிட்டு வணங்கி எழுந்து, திரையை விலக்கிக் கொண்டு உள்ளே புகுந்தாள். ‘அம்மா’ என்ற குரலும், ‘மகளே’ என்ற குரலும் வெளியிலே நின்றவர்களுக்கு, பாசமும் பரிவுமாக பின்னி வந்து விழுந்தன.

மங்கை கைகாட்டியதும் மற்ற அனைவரும் கலைந்து செல்ல ஆரம்பித்தனர். கமலினி மட்டும் அன்னையைச் சந்திக்க விருப்பமுள்ளவள் போல் நின்று கொண்டிருந்தாள். அவளை நெருங்கிய மங்கை, “இந்த நிலையில் அன்னையைப் பார்க்க வேண்டாம், வா! கொஞ்சம் ஆற அமரப்பார்க்கலாம்” என்று அவளை அழைத்துக் கொண்டு வெளியேறினுள்.

மாளிகை வாசலில் இரண்டு காவற் காரர்களின் பிடியில் நின்று கொண்டிருந்தான் மங்கையின் காதலன். அவனைப் பார்த்த கமலினி வேறுபக்கம் திரும்பி நின்று கொண்டாள். மங்கையிடம் ஒரு வீரன், “அம்மா, இவன் யாரோ புதியவன். தங்களுடன் இத்தீவிற்கு வந்து விட்டான்!” என்று முறையிட்டான்.

மங்கை காதலனை ஏறிட்டும் பார்க்காமல், வீரனிடம், “இவனைக் கொண்டுபோய் கோமளத்தீவில் சிறைவையுங்கள்” என்று கூறியபடி கமலினியை அழைத்துக் கொண்டு ரதத்தில் ஏறிப் புறப்பட்டாள்.

மங்கையின் காதலன் திடுக்கிட்டான். வீரர்கள் அவனை இழுத்துக் கொண்டு புறப்பட்டனர்.

(தொடரும்)

துல்லிய மலர்கள் கொஞ்ச......
சோடிசேர் பறவை ஆர்ப்ப......
புள்ளிமான் துள்ளுந் தீவு!

நமது மாவட்ட செயலாளர்கள் : 2

ஆர். பாலகுருசாமி

திருவாரூரில் அன்று திராவிட ரியக்க மாநில மாநாடு. இலட்சியத் திருவிளக்குகளின் கொள்கை முழக்கம் கேட்க திரள் திரளாக மக்கள் சென்று கொண்டிருந்தனர். காளையர்படை களிப்புக் கடலில் மிதந்த படியே கொள்கை முழக்கம்கேட்கபகுத்தறிவுப்பாசறை நோக்கி நடைபோட்டது. திராவிட ரியக்கங்களின் சார்பில் எங்கு பொதுக் கூட்டம் நடந்தாலும், 'ஆஜர்' பட்டியலில் முதல் இடம் வகிக்கும் அந்த இளைஞர், மாநாடாயிற்றே, போகாமல் இருப்பாரா? ஆனால் மாநாடு நடப்பது திருவாரூர் ஆயிற்றே—இவர் இருப்பதோ சிதம்பரத்தையடுத்த ஒரு சிறிய ஊர். வழிச் செலவிற்குப் பணம் வேண்டுமே! கையிலோ அரைக்காசுமில்லை; அலைமோதும் உள்ளத்தோடு துடித்தார். எப்படியும் மாநாடு செல்வதென்ற முடிவிற்கு வந்தார்; வீட்டிற்குத்தெரியாமல் களத்திலிருந்து கொஞ்சம் நெல்லை எடுத்து விற்றார். திருவாரூர்போய்ச் சேர்ந்தார். கொள்கை முழக்கம் கேட்டு சிந்தை குளிர்ந்தார். இந்த அளவிற்கு விடுதலைவேட்கையும், தாயகத்தை மீட்க துடிதுடிக்கும் கொள்கையார்வமும் கொண்ட அந்த இளைஞர் தான் இன்று தென்னார்க்காடு மாவட்ட திராவிடமுன்னேற்றக் கழகச் செயலாளராகப் பணியாற்றும் தோழர் ஆர். பாலகுருசாமி அவர்கள்.

சிதம்பரத்தையடுத்த பழையநல்லூரில் இரத்தினசாமிக்கும், கோவிந்தம்மைக்கும் பிறந்த இவர் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பள்ளிப்படிப்பின் இறுதியை எட்டிப் பிடிப்பதற்குள் சூழ்நிலை குறுக்கே நின்று தடைசெய்தது. பள்ளி வாழ்க்கைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டார். பழமை கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த பழைய நல்லூர் மக்கள் இவர் பகுத்தறிவு கொள்கைகளை வெறுத்தனர். இவரை ஒரு பயங்கர மனிதர்; சமுதாய விரோதி என்றெல்லாம் கருதி, எல்லாவற்றினு மிருந்து இவரை ஒதுக்கி புறக்கணித்து வந்ததில் வியப்பென்ன இருக்க முடியும்? பல இருண்ட மதியினர் மத்தியில் இவர் ஒரு ஒளி விளக்காக உலவினர். இவரின் தந்தை நோய்வாய்பட்டு படுக்கையில் இடக்கும் பொழுது, உற்றார் உறவினர் யாருமே இவர் வீட்டு வாயிற்படியை மிதிக்கவில்லை; அந்த அளவிற்கு பயம் பகுத்தறிவைக்கண்டு! கால்பட்டால் கூட 'அறிவு' ஒட்டிக் கொள்ளுமோ என்ற பயம்! என் செய்வார் பாவம்! தன்னைச் சுற்றி ஒரு பயங்கரச் சூழ்நிலை உருவாகி வளர்ந்து வருவதைக் கண்டார். என்றாலும் காளையின் நெஞ்சம் கலங்கவில்லை. எதையும் தாங்கும் இதயம் கொண்டார். வேதனைகளை வெறுஞ்சிரிப்பால் மாற்றினார். ஓயாமல் கொள்கை கொள்கை யென்று, கொள்கை முழக்கம், இயக்கப்பணி யாற்றி வந்தார். அவர் வாழ்வில் ...டுக்கி வந்து நின்ற இடுக்கண்! ...ப்பா! அவைகள் பயங்கர ...வை; எவ்வளவு உள்ள உரம் ...னுமிலும் ஒருகணம் அவன் ...ழம்பிப்போய் இருப்பான்! இன்றி அவரை அடக்கம் செய்தார். ஊரில் இவருக்கு இருந்தபகை மேலும் வளர்ந்தது. உறவினர்கள் யாரும் இவர் நின்ற 'திசை' கூட திரும்பிப் பார்க்கவில்லை. அவ்வளவு குலை நடுக்கம். இவ்வளவு தொல்லைகளுக்கிடையேயும் இயக்கம் பணி ஓயவில்லை. முன்பொருமுறை மாயவரத்திற்கு நேரு வந்திருந்த போது 'வடக்கின் ஆதிக்கம் எந்த உருவிலும் இங்கே தலைகாட்டக் கூடாது' என்ற கருத்தை விளக்கும் நோக்குடன் காட்டப்பட்ட கருப்புக் கொடியணி வகுப்பில் ஈடுபட்டு—குண்டர் பலரின் தொல்லைக்கு ஆளானர்.

தி. மு. க அரும்பியபின் மாவட்டத்தில் 50 கிளைக்கழகங்கள் இருந்தன! இவர் செயலாளராக பணியேற்றபின் தன் சலியாத உழைப்பால் இன்று 130 கிளைக்கழகங்கள் அங்கே 'விடுதலை கீதம்' பாடிக் கொண்டிருக்கின்றன. அண்ணாவின் ஆணைப்படி, மறைந்த இன்னெரு கொள்கை வீரர் மஜீத் அவர்

களின் குடும்பத்திற்காக நிலம் வாங்கிப் பதிவு செய்தார். 1953 தெ. ஆ. மாவட்ட மாநாட்டை சிறப்புற நடத்தினர். 1954ல் நடந்த சென்னை மாவட்ட இரண்டாவது மாநாட்டில் திறப்பாளராக நியமிக்கப்பட்டார். அதற்குப் பிறகு தி.மு.க நடத்திய மும்முனைப் போராட்டத்தில், ஈடுபட்டு, சிரித்த முகத்துடன் சிறைக்கோட்டம் புகுந்தார். தீராத நோயால் பாதிக்கப்பட்டார். குணமானர். இந்த நேரத்தில் அவர் குடும்பத்தில் குள்ளேயே ஒரு சிறு புயல் [illegible]ந்தது. அதுவும் மற்றவர்கள் செய்த சூழ்ச்சிதான். நிலபுலன்களைவிற்று இருந்த கடனை தீர்த்துக் கொண்டார். இப்படி வாழ்நாள் முழுதும், அடுக்கி வந்த இன்னல்களை சிரித்த முகத்துடன் ஏற்று செயலாற்றி வரும்அந்தக்கொள்கை வீரருக்கு இப்பொழுது வயது நாற்பது; 'மாலைமணி' என்ற இயக்க ஏட்டின் பெயர் கொண்ட ஒரு ஆண் மகவும், 'தேன்மொழி' என்று கலைஞர் கருணாநிதி பெயர் சூட்டிய ஒரு பெண் மகவும் இவருக்கு உண்டு! 'இடுக்கண் வருங்கால் நகுக!' என்ற குறளுக்கு எடுத்துக் காட்டாக இருக்கும் இவர் செயல் வெல்க! வாழ்க! என வாழ்த்துகிறோம்!

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

பார்த்தேன். உண்மையிலேயே இதுவரை ஜெனரல் ஆஸ்பத்திரியைப் பற்றி எந்த ஆசிரியரும் துணிந்து வெளியிட்டதில்லை. தாங்கள் துணிந்து வெளியிட்டதைப் பாராட்டுகிறேன். நிற்க இன்னும் இதுபோல் பொது இடங்களைப் பற்றி மிகவும் துணிந்து தாங்கள் (எண்ணத்தை) வெளியிடுவீர்கள் என்று நம்புகிறேன். வணக்கம்

25-2-55. S. பாண்டியன், மதுரை.

அன்புடையீர்!

26-2-55-ஆம் நாள் தென்றல் இதழில்-கேள்விப் பெட்டியில் தாங்கள் "ஜெனரல் ஆஸ்பத்திரி" பற்றி எழுதியிருந்தது மறுக்க முடியாத உண்மை. "ஸ்டான்லி ஆஸ்பத்திரி" யும் அதே ரகம்தான். இது என் சொந்த அனுபவம். என் இந்தக் கொடுமையோ? எண்ணிப் பார்க்க வேண்டாமா அரசாங்கம்? நிற்க.

திருச்சி அரசாங்க ஆஸ்பத்திரி D. M. O. அவர்கள் நோயாளிகளிடம் காட்டும் பரிவையும் இரக்கத்தையும் குறிப்பிட்டிருந்தீர். அவர் நீடு வாழ்க! அவர் புகழ் என்றென்றும் வாழ்க! ஆனல், எங்கள் ஊரில் உள்ள அரசாங்க டாக்டர்-அவரை நினைத்தாலே வேதனை முற்றுகிறது; வெறுப்பு வளர்கிறது. அவர் இதே ஊர்தான்; இதே ஊர் உயர்நிலைப்பள்ளிப் பழைய மாணவர்தான்; பலருடைய உதவியால் படித்துப் பட்டம் பெற்று முன்னுக்கு வந்த இளைஞர்—முகமதியர். பணக்கார நோயாளியாயிருந்தால் மிகவும் அக்கரையோடு-என் பக்தியோடு-அல்லது பணிவோடு என்று கூடச் சொல்லலாம்-கவனிக்கிருர். ஏழைகளாயிருந்தால் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை; பார்த்தாலும் அலட்சியமாய் உடம்பைத் தொட்டுக்கூடப் பார்க்காமல்-எட்ட நிற்கச் செய்து எழுதிக் கொடுத்து விடுகிருர். நோயாளி தன் வேதனையைக் கூறிக்கொண்டே யிருப்பார். டாக்டர் வேறு ஒருவரிடம் எதையோ பேசிக்கொண்டு எதையோ எழுதிக் கொடுப்பார்.

டாக்டர் ஏழைகளை அலட்சியப் படுத்தலாமா? அவமதிக்கலாமா? முகங் கடுக்கலாமா? அவரும் ஏழையாயிருந்தவர்தானே! இன்று பணத்தைப் பார்த்ததும் பல்லிளித்துப் பாமரரை ஏய்க்கலாமா? அமைதி, அன்பு, இரக்கம், இன் சொல் ஆகியவற்றைக் கொண்டவர் தான் டாக்டர். நோயாளிகளை டாக்டரின் கண்கள் நோயாளிகளாகவே காணவேண்டும்; பணக்காரராகவும் ஏழைகளாகவும் பார்க்கக் கூடாது. வியாதிக்குப் பணக்காரனும் ஏழையும் சமம்தான். பணமும் பணக்காரரின் பக்கபலமும் என்றென்றும் துணை புரியா. ஏழைகளின் மனமாம் எரிமலை வெடித்தால் பணமும்-படாடோபமும் தூள்! தூள்! டாக்டர்கள்-குறிப்பாக எங்கள் ஊர் அரசாங்க டாக்டர் இதைக் கட்டாயம் உணர வேண்டும்.

அன்புள்ள:

26-2-55 "பூவையான்"

பூவிருந்தவல்லி.

★

'கூளப்ப நாயக்கன் காதல்'

அடுத்த இதழில்

வருகிறது

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

குறிப்பிடுகிறேன்! நாளைக்கு அந்த நல்லவர், தனது கட்சியின் கட்டளைக்குப் பணிந்து, திராவிட இயக்கத்தின்மீது அடக்குமுறை வீசுகிற நிலை ஏற்படுகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது திராவிட கழகம் என்ன செய்யும்? என்ன செய்ய முடியும்? காமராசருக்கு ஆபத்தில்லாமல் போராடுமோ!

எப்பொழுதுமேபகைப்புலத்திலே உள்ள ஒருவரை, அவரது தனிப்பட்ட குணங்களோடு புலத்தின் நிலையையும் சேர்த்து வைத்துத் தான் பார்க்கவேண்டுமே தவிர, "அவர் போதும்!" என்று ஆடி விடக்கூடாது! அதன் பலனை நிச்சயம் அனுபவிக்கத்தான் நேரும். கொஞ்சம் எண்ணிப் பாருங்களேன்; காங்கிரஸிலிருந்து கொண்டே திராவிட இயக்கத்தோடு நட்பு பாராட்டுவதாகச் சொல்லப்படும் காமராசர்-அந்த நட்பின்மூலம் நம்மை அடக்கிவிட நினைப்பவராக ஏன் இருக்கக்கூடாது! அப்படி இருக்கவே முடியாது என்பதற்குச் சான்று என்ன? எப்பொழுதுமே அவர் நம்மைத் தாக்காமல் இருந்திருக்கிருரா?

அதற்காக, அனுவசியமாக காமராசரை எதிர்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்றும் நான் கூறவில்லை.

"நாளைக்கு அவரால் நமக்கு ஏதாவது நேர்ந்தால்...?" என்று எண்ணியபடியே நாம் செயல்பட வேண்டும்! ஏற்படாது என்று அறுதியிட்ட முடிவுக்கு வந்தபின் தான் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கவேண்டும். பிரிவினையை முழுமூச்சாக எதிர்க்கும் ஒரு கட்சியிலிருப்பவர்க்கும், பிரிவினையை தன் உயிர்க் கொள்கையாகக் கொண்டிருக்கும் ஒரு கட்சிக்கும் இடையே இந்த உறவு பிறக்கமுடியுமா? பிறக்கமுடியாது என்பது தெரிந்தும், அவரையும், (மனைவிக்காக மைத்துனன் காலைப் பிடிக்கிற மாதிரி) அவருக்காகக் கட்சியையும் ஆதரிப்பது முழுக்க முழுக்க விவேகமற்ற செயல்.

பெரியாரது, இத்தகைய திருப்ப முடியாத போக்கின் விளைவுதான், உபதேர்தலில் சிலபகுதிகளில்அவர் காங்கிரஸை ஆதரிக்க நேர்ந்ததும் ஆகும். இதையும் காமராசருக்காகவேசெய்வதாகப் பெரியார் கூறுவதானல், கொஞ்ச நாட்களுக்கு அவர் ஓய்வெடுத்துக்கொள்வது நலம் என்றுதான் நாம் கூற ஆசைப்படுகிறோம்.

அவருக்குப் பின்னல் இருக்கிறவர்களாவது, அவருக்குச் சரியான யோசனை சொல்லக்கூடியவர்களாக இருக்கிருர்களா? எல்லாம் தலையாட்டி பொம்மைகள்! முழுநீளம் கிண்டல் செய்வதில் மட்டும் குறைவில்லை. துளி மூளைகூட பயனுள்ள மூளை கிடையாது! கட்டுகிற சப்பைக் கட்டைக்கூட ஒழுங்காகக் கட்டத் திராணி கிடையாது! இன்னும் பெரியாரது போக்கும் விளைவும் எப்படியிருக்குமோ போகப் போகத்தான் தெரியும்.

நம்மைப் பொறுத்தவரையில், காமராசரிடம் நாம் அன்பு செலுத்துகிறோம்; மதிக்கிறோம்; பாராட்டுகிறோம்; ஆனல், அவர் நம்மைத் தேடி வந்தாலொழிய நாம் அவரைத் தேடிப் போகமாட்டோம், கொள்கை முறையில்!

அவரைத்தேடி,அவரது கட்சிக்கு உடன்போகும் பெரியாருக்கு ஒரு நாள் 'ஏமாந்தவர்' என்ற பட்டம் கிடைக்குமானல், அந்தப் பட்டம் அவரது இரண்டாவது பட்டமாக-ஒரே அனுபவத்தின் இரண்டாம் பதிப்பாக இருக்கும்! அந்தப் பட்டத்தை இப்பொழுதே 'விடுதலை' வரவேற்றிருக்கிறது! வர...

★

‘கடைக்குணப்’ பேராசிரியர் கடிதம்!

19-2-55ந்தேதி தென்றலில் ‘சிரிப்புத்தான் வருகுதையா பகுதியில்’ பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர். வெ. சு. சுப்பிரமணிய ஆச்சாரியார் பற்றி எழுதப் பட்டிருந்த கருத்திற்கு வருத்தம் தெரிவித்து பச்சையப்பன் கல்லூரி முதல் இடைநிலை சிறப்புத் தமிழ் மாணவர்கள் 22 பேர் கையெழுத்திட்டு 23ம் தேதி யன்று ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். அந்தக் கட்டுரையின் கடிய நடைபற்றி மாணவர்களின் கடிதம் கண்ட பிறகு எனக்கு வருத்தம் ஏற்பட்டது. ஆனால் அதற்குள் பேராசிரியர் வெ. சு. சுப்பிரமணிய ஆச்சாரியாரிட மிருந்தே நீண்ட கடிதம் ஒன்றும், உபகடிதம் ஒன்றும் வந்தன. அதைப் படித்த பிறகு என் வருத்தமெலாம் பறந்து போய் விட்டது

ஏனென்றால் பேராசிரியரின் லட்சணமோ அதைவிடமோசமாக இருந்தது. அந்த ‘செங்காங் கடை’ கடிதமும் அப்படியே பிரசுரிக்கப்பட்டு விளக்கமும் தரப்படுகிறது. ‘சிரிப்புத்தான் வருகுதையா’ பகுதியை படித்து விட்டு வருந்திய மாணவர்கள் ‘பேராசிரியரின்’ கடிதத்தையும் ஊன்றிப் படிப்பார்களாக! படித்து விட்டுத்தங்கள் கருத்தை தெரிவிப்பார்களாக!

[ஆ—ர்]

அவர் கடிதம்!

“தென்றல் பத்திராதிபர்”
அவர்களுக்கு

19-2-55 ல் வெளிவந்த “சிரிப்புத்தான் வருகுதையா” என்ற தலைப்பில் வந்த வசைமொழிகளைக் கண்டேன். நீர் “கலாட்டா” செய்து முடிவு கட்டியது காலாடிகளுக்கு முடிவே தவிர உலகத்துக்கே முடிவல்ல. கலாட்டா செய்கின்றவர்கள் “காலாடிகளே.” ஆதலால் பொதுச் செய்திகளை யாவரும் எப்பொழுதும் ஆராய்வதற்கு உரிமை உண்டு என்பதைக் கல்வி கேள்விகளில் சிறந்து, ஒழுக்கங்களில் மிகுந்து, நெடுங்காலமாகத் தமிழருக்கு உழைத்து வரும் பெரும் பத்திரிகையின் ஆசிரியராக விளங்கும் தங்கள் அறியாமைக்கு வருந்துகிறேன். தொல்காப்பியத்திற்கு முதல் உரை எழுதிய இளம்பூரணருக்குப் பின்னர் எத்தனையோ ஆசிரியர்கள் உரை எழுதியுள்ளார்கள். அவர்களை இளம்பூரணர் யான் எழுதிய உரையின்பின் நீங்கள் எழுதலாகுமோ என்று பின்னெழுதியவர்களை வசை பாடவில்லை. குறளுக்கு மணக்குடவர் எழுதிய பிறகு எழுதப்பட்ட உரைகளை மணக்குடவர் வசை புராணம் பாடவில்லை என்பதைத் தாங்கள் அறியவில்லை போலும். உமது அவசர புத்தி எனது கட்டுரையை வெளியிட்ட பத்திரிகையின் பெயரையும் குறிக்க மறக்கச் செய்ததுபோலும்; அல்லது அப்பத்திரிகையின் பெயரைக் கூற அஞ்சி நடுங்கி விட்டீரோ அறியேன். நிற்க. நுமக்கு ஆசான் யார்? என்பதை அறிய விரும்புகிறேன். அவர் இப்படித்தான் எழுதக் கற்றுக் கொடுத்தாரா? அவரும் நும்மைப் போன்றுதான் இருப்பாரோ என்று கருத நேரிடுவதற்கு வருந்துகின்றேன். முடிவாக உம்முடைய எழுத்து, பத்திராதிபர் எழுதும் எழுத்தன்று. உத்தரவாதமில்லாமல் எழுதுகின்ற கற்றுக்குட்டிகளுடைய எழுத்துப் போன்றிருந்தமைக்குப் பெரிதும் வருந்துகிறேன்.

தாலி செய்தியாக என்னை வினவியவர்களுக்கு எழுதினேனே தவிர தங்களைப போன்ற சர்வகலா வல்லவர்களுக்கு எழுதியதன்று. தங்கள் முடிவுக்கு மறுப்பாக விருக்குமாயின் தங்களுடைய பெயரைக் குறித்து எழுதியிருப்பேன். உலகம் உங்களுடையதல்ல. பொது என்பதை மாபெரும் கவியாகிய தங்கள் நினைவுக்கு வரவில்லை போலும். புத்தி “பேதலித்துவிட்டதாக” மாணவர் முடிவு கட்டிவிட்டனர் என்று புனைந்துள்ளீர். மாணவர்கள் மாண்புடையவர்கள். நன்றியுடையவர்கள். அவர்கள் அங்ஙனம் முடிவுகட்டி நன்றி கொல்லும் பாதகர்களல்லர் என்று நம்புகின்றேன்; 15-2-55 ல் “பிரசண்ட விகடனில்” யான் எழுதிய “தமிழர் மணமும் தாலியும்” என்ற செய்தியைப் பற்றி மறுத்து எழுதாமல் சிலப்பதிகாரத்தை என் எடுத்துக் கொண்டீர்களோ தெரியவில்லை. புத்தி யாருக்குப்பேதலித்து விட்டது என்பதை நீரே கூறும். யான் சிலப்பதிகாரத்தைக் குறை கூறியபொழுது தாங்கள் எங்கேயிருந்தீர்? அப்போதே என்னுடைய கருத்துக்களை நேரிய முறையில் மறுத்திருக்கலாமே, அல்லது வசை புராணமாவது பாடியிருக்கலாமே. நீர் ஒரு கவியாயிற்றே. அந்தச் சந்தருப்பத்தைவிட்டுத் “திருடன் புகுந்த ஆறுவது மாதம் குலைப்பது” போன்று இப்பொழுது அதைப்பற்றி எழுதுவானேன். அப்போது தாங்கள் கீழ்பாக்கத்தில் சிகிச்சை பெற்றிருந்தீர் போலும். “இவரும் பொற்கொல்லராம்” என்று ‘ஆம்’கொடுத்துஎழுதியிருப்பதை நோக்கின் சிரிப்பே வருகின்றது. யான் பிறந்த மரபை ஒளிக்கவில்லையே. **அதை உணர்த்தவே ஆச்சாரி என்ற சொல்லை யான் யாண்டும் உபயோகித்து வருகின்றேன்.** யான் என் சாதியை அறியக் கூடாதவாறு ஏதாகிலும் “சுப்பிரமணியதாசன்” என்ற புனைபெயரால் மொட்டைத்தலையை மயிர் (கிராப்பு) வைத்து மறைப்பது போன்று மறைத்துள்ளேனா. உம்மைப் போன்ற சாதி வெறிபிடித்த சிலருக்கு 17-10-44 ல் ஆனந்த போதினியிலும் 10-6-51 ல் விடுதலையிலும் யான் எழுதியுள்ள செய்திகளையே மீண்டும் உமக்குப் பதிலாக எழுதவேண்டியிருக்கிறது.

பிறர் எழுதிய கதையைத் திருடித் தாம் எழுதியதாக வெளியிடும் கள்ளர் மனம் போன்றல்லாமல் யான் எழுதிய கட்டுரையையே மீண்டும் எழுத என் மனம் கூசுகிறது. கண்ணன் என்ற பெயருக்கே ஒரு தனி மகிமையுண்டு போலும். ஆடும் பாடும் திருடும் எல்லாம் செய்யும் போலும். அதனுடன் தாசப் பட்டமும் சேர்ந்துவிட்டால் குரங்குக்கு கள் வளர்த்ததுபோலாகும். பெண் கேட்ட அரசனுக்கு மறவன் ஒருவன் மறுத்து மறம் என்ற துறையில் வசைபுராணம் பாடியது போன்றுள்ளது நுமது வசை. யான் எழுதியது என் மனத்தெழுந்த சினியாக் கதையன்று-கற்பனை அன்று அல்லது பிறன் எழுதிய கதையைக் களவாடியதன்று. பண்டைய இலக்கியங்களிலுள்ள செய்திகளைக் கொண்டு எழுதிய செய்தியாகும். இலக்கியம் எல்லோருக்கும் பொது, மேலும் அச்செய்தி உமக்காக வல்ல, யான் எழுதியது. நல்லாசிரியரை அடுத்து இலக்கிய இலக்கணங் கற்றுணரும் அறிஞர்களுக்கு எழுதியது ஆகும். மற்றவர்களுக்கு எமது கட்டுரையானது நாயிடம் அகப்பட்ட முழுத் தேங்காயாகும். உருட்டி உருட்டிப் பற்களினால் கடித்தும் முடியாத காலத்தே குரைத்து ஊளையிடுவதன்றோ நாயின் இயல்பு. கசடறக் கற்றவர்கள் குற்றம் காணுவாராயின்-குற்றத்தை மட்டும் வினவுவார்கள். மறு. பார்கள். நீர் யான் எழுதியதில் குற்றம் கண்டு எழுத முடியாமையால் பெண் கேட்க வந்தவனிடம் குலம் பேசுதல் போன்று குலம் பேச முற்பட்டீர். என் குலத்தைப் பற்றி நுமக்கேதுக் கவலை? ஏதாவது சம்பந்தம் செய்ய விரும்புகின்றீரோ என்று ஐயுறுகின்றேன். “ஆட்டு மூளை வாங்கிவந்து தரவேண்டிய” சிரமம் பெரியாராகிய தங்களுக்கு வேண்டியதில்லை. கோவலன் காலத்தில் வணிகர்கள் “நிணவாணிபமும்” செய்திருந்தனர். எனவே, வணிகராகிய தாங்களும் நிண வாணிபக் கடையொன்று (கசாப்புக் கடை) வைத்துக்கொண்டால் விலைகொடுத்து யானே வாங்கிக்கொள்ளுகிறேன்.

சிலப்பதிகார ஆராய்ச்சி பாடிய பொழுது திருவாளர் குருசாமி அவர்கள் தாளம் போட்டார்கள். அப்பொழுது மதியிழந்து மூளை கலங்கி எங்கேயிருந்தீர்? மேலும் என்னுடைய சிலப்பதிகார ஆராய்ச்சி உமக்குப் பல்லும் முளைக்காத பருவத்தே “லோகோபகாரி” யிலும் எனது கெழுதகை நண்பர் உயர்திரு. நாரணதுரைக்கண்ணனர் அவர்களுடைய துணைகொண்டு ஆனந்தபோதினியிலும் கட்டுரைகளாக வெளிவந்து, பின் சுமார் 160 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகமாக ஆனந்தபோதினி அச்சகத்தாரால் வெளியிடப்பட்டது. எனவே எனது ஆராய்ச்சிக்குத் திருவாளர், குருசாமி தாளம் போடவில்லை. **அவருக்குத் தாளம் போடத் தெரியாது.** தாளம் போட்டுப் பின்பாட்டு பாடுவதற்கு அவர் “தாசரல்ல” என்பதை அறியவும். வெய்யிற் காலத்தில் எதிர்பட்டவர்களையெல்லாம் கடிக்கின்ற விலங்கு போன்று நீர் எல்லோரையும் வசைபாடியிருக்கின்றீர. எனக்கும் அவர்களுக்கும் யாது தொடர்பு? அவர்கள் சிறந்த அரசியல் வாதிகள், யானோ இலக்கிய இலக்கண வாதி, மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடாதீர்.

எனக்கு ஒரு சந்தேகம் வந்துள்ளது. தி. மு. கழகத்தினுடைய கொள்கைகளுள் சாதி, சமயம் முதலியவற்றை ஒழித்துக்கட்டுவதும் ஒன்று. இலக்கியம் கொண்டு என் கருத்தை யான் கூறினேன். அஃது உம்மைக் குறித்து ஒன்றுமில்லை. அப்படியிருக்க நீர் எனது கருத்தை எந்த வன்மையான மொழிகளாலும் ஆதாரத்துடன் மறுத்திருக்கலாம். அதனையொழித்து ஏதோ வெறிகொண்டு உமது கட்சியின் கொள்கைக்கு நேர்மாறுகச் சாதியைத் திட்டுகிறீரே அது பொருந்துமா? எனவே சாதி வெறி உடைய உமக்கு ஏன் அந்தக் கழகத்தார் சீட்டுக் கொடுத்தல் கூடாது? உம்மைப் போன்ற தளும்பும் அரை குடங்களால், நிறை குடங்களாகிய அறிஞர் அண்ணாதுரை போன்றவர்களது பெயரும் கெடுமன்றோ? சாதிப் பிரிவினையால் தமிழன் பிரிந்து வாழ்கின்றான். சாதி ஒழிந்தால் ஒன்றாக வாழ்வான என்ற கொள்கையைக் கொண்டு தமிழர்களை ஒன்றுபடுத்த வேண்டியப் பேரறிஞர்களாகிய திரு. பெரியார், திரு. குருசாமி, திரு. அண்ணாதுரை முதலியோர் உழைத்து வருகின்றார்கள். நீர் கோடாரிக் காம்பாக வேலை செய்து பிளவுபடுத்தல் கூடுமோ?” மேலும் “அந்தப் பொற்கொல்லனின் அவதாரமாக இருக்குமோ” என்று ஐயப்படுவானேன்? நீர் நன்றாகக் கண்டுபிடித்து விட்டீர். மற்றையோருக்கு இந்தப் பழம் பிறப் புணர்ச்சி வருவது அரிது. நீர் அந்த வணிகர் குல கோவலனேயாகும். தீவலம் வந்துகொண்ட மனைவியை விடுத்துப் பரத்தை மாதவியோடு வாழ்வாங்கு வாழ்ந்து மகள் ஒருத்தியையும் பெற்று இறந்து மண்ணில் வந்து உனது கதையைப் பாதுகாக்க முயலும் மாதவிதாசரே! நினது கண்ணகி எங்கேயுள்ளாள்? கண்ணகியோடு சென்று கொலையுண்டபொழுது கண்ணகியை நினைத்தே இறந்தமையால் அவளுடைய நினைவார்த்தமாக இப்பிறவியில் **கண்ணகிதாசன்** என்ற தன் மருவாகக் **கண்ணதாசன்** என்று பெயர் புனைந்துள்ளீர் போலும். உம்முடைய சாதி வெறி வியக்கத் தகுந்ததே.

திரு. முத்தைய செட்டியாரே! உம்முடைய மூதறிவே அறிவு. எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட கதையின் நாயகனாகிய கோவலன் என்ற வணிகன் செய்தி கூறும் கதை பற்றிய ஆராய்ச்சியைக் கண்டு உமது குல வெறியால் எனது குலத்தைக் குறை கூறுதல் தகுமோ? உமது அற்பச் செயலை இப்போதைய கம்மியர்கள் கண்டால் உம்மைத் தூற்றாது விடுவார்களோ? தென்றல் தேய்ந்தொழிய வேண்டியது தான். கடித்த நாயைக் கடித்த[illegible] இடையாது என்பதற்கேற்ப[illegible] டொழிக்கும் மாண்புடைய[illegible]

உப கடிதம்!

“தென்றல்”
பத்திராதிபர் அவர்களுக்கு,
சென்னை.

ஐயா!

19-2-55-ல் நுமது வெளியீட்டில் வெளியான “சிரிப்புத்தான் வருகுதையா” என்ற தலைப்பில் வந்த செய்திக்குப் பதிலாக இதனுடன் 5-பக்கங்கள் கொண்ட செய்தியை நுமது வெளியீட்டிலேயே வெளியிட்டுப் பத்திராதிபர் என்ற பெயரை நிலைகாட்டிக் கொள்ளுவீர் என்று நம்புகின்றேன். மீண்டு மீண்டும் எழுத நேரிடினும் அவையனைத்தையும் நுமது வெளியீட்டிலேயே வெளியிட்டு நுமது ஆண்மைத்தன்மையையும் நிலை காட்டுவீர் என்று கருதுகின்றேன்.

இங்ஙனம் அன்பன்,
(Sd) வெ. சு. சுப்பிரமணிய ஆச்சாரியார்,
பச்சையப்பன் கல்லூரி.

26-2-55 — சென்னை

மியர்கள். தனக்கென வாழாது பிறர்க்கென மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும், நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களையெல்லாம் செய்து கொடுத்து வாழும் இயல்புடையவர்கள். கம்மியர் பழந்தமிழ்க் குடியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தொல்காப்பியம் கூறும் கம்-(தொழில்) என்ற பகுதியினடியாகப் பிறந்த கம்மியர் என்ற பெயரால் வழங்கப்பட்டனர். கம்மியர் நாடோடிகளல்ல. பழந்தமிழ்க் குடிகள். தமிழ்நாட்டின் சிறப்பான நாகரிகத்திற்கே கண் போன்றவர்கள். ஆதலால்தான் அவர்களுக்குக் கண்ணாளர் என்ற பெயருமுண்டு. "இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யாக்கால் என்ன பயத்தோ சால்பு" என்றது பழந்தமிழ் குடிகளின் இயல்பு. இறுதியாக உமக்கொன்று கூறுகின்றேன். நீராகிலும் சரி, நீர் யாரைச் சங்கப்புலவராக நினைக்கின்றீரோ அவரைக் கொண்டாகிலும் சரி, தக்க சான்றுகளுடன் எனது சிலப்பதிகார ஆராய்ச்சியையேனும் சரி, மற்ற மற்றையேனும் சரி மறுத்து எழுதுவீரானால் எம்முடைய எழுத்தை மாற்றிக்கொள்ளுகிறேன். வசைபாடினால் எம்முடைய மரபினரோடு போராட நேரிடும். காலாடிகளைப் போல் கலாட்டா செய்வது பத்திராதிபர்களுக்கு அழகல்ல என்பதையும் இதன்மூலம் அறிவிக்கின்றேன்.

★

மேலே நீங்கள் படித்தது, **பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியரும்,** "சிலப்பதிகாரக் கண்ணகி நெறி கெட்டவள்" என்ற திண்ணிய முடிவைக் கண்டுபிடித்தவருமான திருவாளர் வெ. சு. சுப்பிரமணிய ஆச்சாரியார் அவர்களின் கடிதமாகும். 19-2-55 தென்றலில் வெளியான 'சிரிப்புத்தான் வருகுதையாவு'க்கு மறுப்புரைப்பான் வேண்டி, அவர் எழுதிய 'நெருப்புத்தான் வருகுதையா' தான் மேலிருப்பது.

கண்ணியமற்ற வசைமொழிகளைத் தென்றல் கொட்டிவிட்டதாகக் கருதி, கண்ணியமாகப் பதில் கூறவந்த அவரது கடிதத்தை மீண்டும் ஒருமுறை படித்துப் பாருங்கள். அதைப் படித்துவிட்டு, 19-2-55 உ தென்றலை மீண்டும் படிப்பீர்களானால் அதில் எழுதப்பட்டிருப்பது நூற்றுக்கு நூறு சரி என்பதை நீங்களே சொல்வீர்கள். 'சிரிப்புத்தான் வருகுதையா' பகுதியை எழுதியவர் யார் என்பது கிடக்கட்டும், அவர் யாராக இருந்தாலும் இருக்கலாம்; ஆனால், ஒரு பேராசிரியராக இருக்கமுடியாது; இல்லை என்ற உண்மையை ஆசிரியனாகிய நான் கூறுகிறேன். அவர் ஒரு "மிகச் சிறு ஆசிரியர்". கண்ணகியைக் கற்பின் செல்வியாக மதிக்கின்ற ஒரு தமிழர். அந்தக் கற்பினையே களங்கம் மிகுந்ததாகக் காட்டும் ஒரு 'மனிதர்' பால் சீறிவிழுந்து எழுதியுள்ளார். 'தாய் தடுத்தாலும் விடேன்' என்கிற எண்ணம் அவரை அவ்வாறு எழுதத் தூண்டியிருக்கலாம்!

அதனை மறுத்துரைக்க வந்தவர் பேராசிரியர், என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அவர், தான் குறித்த வசைமொழிகள் அனைத்துக்கும் தானே ஏகபோக உரிமையாளராகி விடுகிறார், எழுதிய முறையினால்! அழுத்தமாக, "என் ஆராய்ச்சியை மறுத்து எழுது!" என்று சவால் விடுகிறார். 'போன தலைமுறையிலேயே' அதைப் புத்தகமாக வெளியிட்டுள்ளாராம்! எதை? "கண்ணகி, கற்பிழந்தவள், [illegible]தவி, கேடுகெட்ட பரத்தை" என்கிற தனது ஆராய்ச்சியை! "நீ எழுது! இல்லையென்றால், நீ சங்கப் புலவராக மதிக்கின்ற எவரையாவது கொண்டு எழுது!" என்று சலுகையும் கொடுக்கிறார். நான், பேராசிரியர் வரதராசனார், அன்பு கணபதி, பரமசிவானந்தம், டாக்டர் ராசமாணிக்கம், ஒளவை துரைசாமி, வெள்ளைவாரணர், நாவலர் சோமசுந்தர பாரதியார், பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், தேவநேயப்பாவாணர், மற்றும் தமிழாசிரியர்கள் பலரையும் சங்கப்புலவர்கள் என்றே மதிக்கிறேன். அவர்களது எழுத்துக்கள்-ஆராய்ச்சிகள் முதலியவற்றை எச்சரிக்கையோடு படிக்கிறேன். அதிலே எனது கருத்துக்கு முரண்பாடு கண்டால், எச்சரிக்கையோடு கவனிக்கிறேன். சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும் எச்சரிக்கையுடனேயே சொல்லுகிறேன். காரணம், அவர்கள் கருத்திலே முரண்படுவார்களே தவிர, அடிப்படைப் பண்பாட்டையே குலைக்கும் பயங்கர வாதிகளாகக் காட்சியளிக்கமாட்டார்கள். அவர்கள், தெளிந்த அறிவுபடைத்தவர்கள். சொல்லப்போனால் அவர்கள் அறிவுக்கருவூலங்கள்! பண்பாடு 'புரிந்தவர்கள்.

நான் கொள்ளும் கருத்தினுக்கு நேர் எதிர்மறையான கருத்தைப் பல தமிழாசிரியர்கள் கொண்டுள்ளனர். அது இயற்கை. ஆனால், அவர்களையெல்லாம் கடுமையான வார்த்தைகளைக் கொண்டு சாட வேண்டுமென்ற எண்ணம் எப்போதும் தோன்றுவதில்லை. தோன்றவும் முடியாது! காரணம், சிறிய அறிவாயினும் கால்வீசம் பங்காவது தெளிந்த அறிவு எனக்கு இருப்பதாக - தப்போ - சரியோ நான் கருதிக்கொண்டிருக்கிறேன்! அத்தகைய 'சங்கப்புலவர்'களின் நூற்களை நான் நிறையப் படிக்கிறேன். படிக்கும்போதெல்லாம், கருத்து முரண்பாடு மறைந்து, அவர்களிடம் நீங்காத ஒரு பற்றுதல் ஏற்படுவதைக் காண்கிறேன். பண்பாட்டு முரண்பாடு தவிர்த்து, வேறு எந்த முரண்பாடு, இதே பேராசிரியரிடம் ஏற்பட்டிருந்தால்கூடக் கவலைப்பட்டிருக்கமாட்டேன். மாறாக, 'பக்தி' கூட செலுத்துவேன். தமிழாசிரியர்களிடம் அவ்வளவு மரியாதை எனக்கு உண்டு. 'தந்தையர்' அவர்களே என்கிற எண்ணமும், நாம் குழந்தையே என்கிற எண்ணமும் என்றைக்கும் என் மனதை விட்டு நீங்கியதில்லை. கையில் பத்திரிகை இருப்பதால் எதையும் சொல்லிவிடலாம் என்கிற துணிவை அது சரியாக இருந்தால்கூட-நான் செயல்படுத்துவதில்லை. எடைபோட்டுப் பார்த்துச் சொல்லக்கூடியவற்றையே சொல்லுவேன்.

ஆனால், முன்பு 'விடுதலை'யில் வெளிவந்த, வெ. சு. சு. வின் சில கட்டுரைகள், தமிழ் உள்ளம் கொண்ட இளைஞர்களுக்கு ஆராத புண்ணாகிவிட்டன. எழுதியவர் பேராசிரியர் என்கிற நினைவுபோய், 'கேவலமான ஆராய்ச்சிக்காரர்' என்கிற எண்ணமே மேலோங்கி நின்றது! "கண்ணகி கற்பிழந்தவள்!" என்கிற அந்த ஆராய்ச்சி என்மூக்கு அறிவு உள்ளவனுக்கும் எட்டியாகத் தோன்றும். அன்று ஏற்பட்ட கோபமும் வெறுப்பும் 'சிற்றறிவு' படைத்த எனக்கே நீங்கியபாடில்லை. இன்று 'தாலிப் பிரச்சினையிலும் அதே பெருந்தவறை அதே ஆசிரியர் செய்கிறார் என்று நான் கருதும்போது-அதை நான் கூறும்போது - எழுதியவர் கடுமையான வார்த்தைகளை உபயோகித்ததில் ஆச்சரியமில்லை!

பேராசிரியர், தனது ஆராய்ச்சியை மறுத்து எழுதுமாறு, என்னை அழைக்கிறார், அறைகூவி! மறுப்பில்லை, எனக்கு! இதுபோன்ற நேரங்களில் நான் பின்வாங்கியதில்லை! காரணம், கற்றுத்தெளிந்த அறிஞரின் சீடன் நான். மேலும், இந்த விவாதம், பேராசிரியர் ஒருவருக்கும் 'சிறு ஆசிரிய'ராகிய எனக்கும்நடைபெற்று, அதில்நான் தோற்றாலும், பேராசிரியரிடம் சிறு ஆசிரியர் தோற்றார் என்று போய்விடும்! ஆனால், சிறு ஆசிரியரிடம் பேராசிரியர் தோற்றால்தான் மானக்கேடு!

[வெ. சு. சுவின் அந்த ("160 பக்கம் கொண்ட") ஆராய்ச்சியில், நமது பண்பு-நெறி இவற்றிற்கு முரண்படும் இடங்களை மறுத்து இரண்டு இதழ்களில் தருகிறேன்] நிற்க.

கடிதத்தில் அவர், 'கொட்டி அளந்த குறுணி'க்கு வருவோம். அந்தக் கடிதத்தைப் பிரசுரிக்குமாறு ஒரு உபகடிதமும் வைத்து, அனுப்பியுள்ளார். அதில், "ஆண்மை இருந்தால் இதை வெளியிடு! வெளியிட்டுஉன்**ஆண்மைத்தன்மை**யை நிலைநாட்டு" என்று கூறியுள்ளார். இதோ மேலே அவரது உபகடிதம் உட்பட அனைத்தையும்-ஒருவரியும் பிசகாமல் - விலகாமல் வெளியிட்டு, **என் ஆண்மையை அதில்** நிலைநாட்டியுள்ளேன்! (பேராசிரியர் அவர்களுக்கு ஒரு வார்த்தை! 'ஆண்மை' என்றாலே, ஆண் தன்மை என்ற பொருள் வந்துவிடும். 'ஆண்மைத்தன்மை' என்று 'கேட்டுவாசல்,' லெட்டர்க் கடிதம்' எழுதவேண்டிய அவசியமில்லை!)

நான் 'கலாட்டா' செய்து முடிவு கட்டியது' 'காலாடி'களுக்கே முடிவென்கிறார். அதற்கொரு 'ஆமாம்' போட்டு நிறுத்தினால், தமிழ்நாட்டு நல்லறிவாளர்கள்-பண்பாடு விரும்பிகள்-அனைவரும் காலாடிகளாக நிற்கிறார்கள்! அவர் சொன்னது, "கண்ணகி கேடுகெட்டவள்; தமிழன் தாலியின் அடிமை" என்பதாகும்; அதற்குத் தென்றலில் வந்த முடிவு, "அவர் பைத்தியம்" என்பதாகும்! அறிஞர்கள் ஆய்ந்து தெளிவராக! பொதுவாக அவர், "கலாட்டா செய்பவர்கள் அனைவரும் காலாடிகளே!" என்கிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் இந்த உண்மை, விஞ்ஞான ரீதியாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதென்று நினைக்கிறேன்! நாமெல்லாம், கலாட்டா செய்பவர்கள் அறிவாளிகள் என்றல்லவா எண்ணிக்கொண்டிருந்தோம்? இதோ, பேராசிரியர் கண்டுபிடித்துவிட்டார், "காலாடிகளே!" என்பதை! வாழ்க அவர் ஆராய்ச்சி!

என் கருத்தை-தாலி பற்றியது-அவர் பொதுவாக மறுத்து எழுதியதால் எனக்கு ஆத்திரம் ஏற்பட்டதாகவும் அதனாலேயே நான்(?) வசைபாடியதாகவும் நினைத்து, குறள் உரையாசிரியர்களைக் குறிப்பிட்டுள்ளார். நான் முன்னால் கூறியுள்ளேன், இந்தக் கருத்து இவரது இரண்டாவது-பண்பாட்டை இழிவுபடுத்தும்-வெடி என்றும், தென்றலுக்கு வந்த கோபத்திற்குக் காரணம் இரண்டும் என்றும்! ஆகவே, இதற்கு மறுப்புரைக்க வேண்டிய அவசியமில்லை.

அடுத்து, "கல்வி கேள்விகளில் சிறந்து, ஒழுக்கங்களில் மிகுந்து நெடுங்காலமாகத் தமிழருக்கு உழைத்துவரும் பெரும் பத்திரிகையின் ஆசிரியராக விளங்கும் தாங்கள்" என்று, நம்மைப் பற்றிய அவரது கருத்தை வெளியிடுகிறார். நம்மிடத்தில் இவ்வளவு மதிப்பு வைத்திருக்கும்அவரது 'கருத்துரை' மட்டும் ஏன், நம்மை - தமிழர்களை- இவ்வளவு அவமானப்படுத்துகிறது என்று எனக்குப் புரியவில்லை! ஒரு ஆராய்ச்சி செய்யும்போது, அதனால் தமது நாகரீகத்திற்கு ஏற்படும் லாப நட்டங்களையும் ஓரளவாவது மனதில் கொள்ளவேண்டும் என்பதை, ஏன் அவர் மறந்துவிட்டார் என்று நினைத்து வருந்தாமலிருக்க முடியவில்லை. ஆரியக் கதைகளோடு திராவிடப் பண்பையும் சேர்த்து அவர் சாடுகிறார். கண்ணகியை கற்பின் செல்வியாகக் கருதுவது பொருந்தாது என்கிறார். அவர் சொல்லுவதுபோல, 'கண்ணகி கேடுகெட்டவளாகவே' ஆராய்ச்சியில் தெரிகிறது என்றே வாதத்துக்காக வைத்துக்கொண்டாலும், அந்த ஆராய்ச்சி, உயர்ந்த எண்ணத்தை எவ்வளவு மழுங்க அடித்துவிடுகிறது, என்பதை நினைத்து அழவல்லவா தோன்றுகிறது.

இவ்வளவு மரியாதைப் பண்போடு கடிதம் துவங்கும் அவர் பின்னாலே கொட்டியுள்ள வார்த்தைகளைப் பார்க்கும்போது, நமக்குக் குழப்பமே மீக்கூருகிறது! நாம் குறிப்பிட்ட 'உடல்நிலை'யிலேயே அவர் இருப்பதாகவே முடிவுகட்டத் தோன்றுகிறது!

"உமக்குக் கற்றுக்கொடுத்த ஆசான் இப்படித்தான் எழுதக் கற்றுக்கொடுத்தாரா? அவர் யார்?" என்று கேட்கிறார். அவர் மட்டும், பேராசிரியரின் ஆராய்ச்சிகளைப் படிப்பாரானால், என்னைப்போல் எழுதிக் கொண்டிருக்கமாட்டார்; கைநீட்டி விடுவார்; கோபக்காரர், அவர்! தெளிவுடன் சிலம்பு கற்றவர், அவர்!

பேராசிரியர், 19-2-55உ இதழில் "சிரிப்புத்தான்..." பகுதியில் வந்ததை, என்னுடைய எழுத்தாகவே முடிவுகட்டி, நான் கற்றுக் குட்டிகளைப்போல" எழுதியுள்ளதாகக் கூறுகிறார். அந்த எழுத்துக்கள், நான் ஆசிரியப் பொறுப்பில் இருக்கும் தென்றலில் வந்துள்ளதால், அதை எழுதியவரின் பக்கம் திரும்பாமல், பொறுப்பைக் கழிக்காமல் அந்தப் பொறுப்பை நானே ஏற்றுக்கொள்ளத் தயாராயுள்ளேன். அந்த நடையைத் தவிர, கருத்து என் கருத்தேதான்! ஆகவே, முழுப்பொறுப்பும் என்னைச் சார்ந்ததே! நான் 'கற்றுக்குட்டிகளைப்போல' எழுதி

வெண்பாப் போட்டி

வெண்பாப் போட்டி 5

ஈற்றடி: 'கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்'

குறிப்பு: நேரிசை வெண்பாக்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

முடிவு தேதி 19-3-55

நீதிபதி 'சகி' தென்றல் : : சென்னை-6.

யுள்ளதாகக் கூறுகிருர். இவ்வளவு சொன்னவர், 'போல' எதற்குப் போடவேண்டும்? கற்றுக்குட்டி என்றே முடிவாகக் கூறிவிடலாம்! நான் வருந்தமாட்டேன்! கற்றுக்கொட்டியவர்களே அப்படி இருக்கும்போது, சிற்றறிவும் குறைந்த வயதும் கொண்ட நான் அப்படி இருப்பதில் தவறில்லை!

தாலி பற்றி, தன்னைக் கேட்போர்க்குப் பதில் கூறியதாகக் கூறுகிருர். நானும் 'அவர்' பற்றிக் கேட்டோர்க்குத்தான் பதில் கூறியுள்ளேன். கேளாதவர்களிடம் போய்ச் சொல்ல நான் என்ன பித்தனா?

அவரது கட்டுரை வந்த பத்திரிகை பற்றி நான் கூருமல்விட்டது ஏன் என்கிருர்; அச்சமா என்கிருர்! அந்தப் பத்திரிகை (பிரசண்டவிகடன்) என்ன பீரங்கியா, அணுகுண்டா! இவ்வளவுக்குத் துணிந்தவன், இதற்கு அஞ்சுவானா என்பதுகூட 'பெரிய மூளை'யில் படவில்லையே! தேவையில்லை - விட்டுவிட்டேன்!

அவர் சிலப்பதிகாரம் பற்றிக் குறைகூறிய சமயத்திலேயே நான் பதில் எழுதவில்லை; அப்போது நான் எந்தப் பத்திரிகையிலும் இல்லை. அதற்காக "திருடன் புகுந்த ஆறுவது மாதமா குலைப்பது?" என்று உதாரண நயத்தோடு கேட்கிருர். முதலில், என்னைநாயாக்குவதற்காக, தன்னை திருடனுக்கிக் கொள்கிருர்! வாழ்க!

புகுந்த திருடன் ஆறு மாதமும் அந்த வீட்டிற்க்குள்ளேயேஇருந்துவிட்டால், தொடர்ந்து குரைத்துத்தானே தீரவேண்டியிருக்கிறது! பேராசிரியர் இன்னும் அங்கே தானே இருக்கிருர்? வெளியேறவில்லையே! அல்லது வெளியேறிவிட்டாரா? சிலம்பு பற்றிய தனது கருத்தை மாற்றிக்கொண்டுவிட்டாரா? தயவு செய்து, அவர் சொல்லட்டும். அந்தக் கருத்தை மாற்றிக்கொண்டுவிட்டார்என்றுல், அவரிடம் மன்னிப்புக் கேட்கத் தயார்! தீயினுற் சுட்டபுண் உள்ளாறும்; ஆருதே நாவினுற் சுட்ட வடு! என்னையல்ல; நமது பண்பாட்டை, கண்ணகியின் மாண்பை நாவினுற் சுட்டவடு நமது நெஞ்சிலல்லவோ பதிந்து ஆறமாட்டேன் என்கிறது! அவர் சிலப்பதிகாரத்தைச் சாடவேண்டிய அவசியம் ஏற்பட்டதே, அவரது 'சாதிப்பற்றுல் வந்தவினை' என்பதை அவரது கட்டுரையைப் படித்தவர்கள் தெரிந்துகொள்ள முடியும். வஞ்சிப்பத்தன் என்னும் பாத்திரம் அவரது அனுதாபத்துக்கு ஆளாகி, (சாதிப்பற்றுல்) சிலப்பதிகாரமே கேவலமாகப் படுகிறது அவரது கண்களுக்கு! அதைத்தான், "இவரும் பொற்கொல்லராம்" என்ற வாக்கியம் குறிக்கிறது! அதை உறுதிப்படுத்துவதுபோல, தன் சாதிப்பற்றை உணர்த்தவே ஆச்சாரி என்ற சொல்லைத்தான் யான் டும் உபயோகித்து வருவதாக அவர் கூறுகிருர். இப்போது உண்மைக் காரணத்தை அறிஞர்கள் புரிந்துகொள்வார்களாக! கேவல ஆராய்ச்சியின் அடிப்படையைத் தெற்றெனக் கண்டு கொள்வார்களாக!

அவரது எழுத்துக்களிலிருந்தே அவரது சாதிப்பற்றுல் வந்த ஆராய்ச்சி அது என்று நாம் கண்டுபிடித்தால், நம்மை-என்னை-நான் 'கோவலனின் சாதியான வணிகன்' என்ற உண்மையைத் தேர்ந்தெடுத்துத் தாக்குகிருர், இப்போது நான் கோவலனுகவும், அவர் வஞ்சிப்பத்தனுகவும் ஆகிவிடுகிறேம், அவர் கூற்றுப்படி! இதை வைத்துக்கொண்டே நண்பர்கள்-சிலப்பதிகாரம் படித்தவர்கள்-நீதி யார் பக்கம் என்று முடிவு செய்துகொள்ளலாம்! ஒரு பேராசிரியர்-பல மாணவர்களைப் பயிற்றுவிக்க வேண்டியவர்-இவ்வளவு குறை மதியினராக இருக்கக்கூடாது. "ஏய்! பழைய கோவலா! விட்டேனு பார்!" என்கிருர். இவர் சொன்ன பிறகுதான், இயக்கத்திற்கு வந்தபின் மறந்துபோன எனது சாதிப்பட்டம் எனது நினைவுக்கு வருகிறது! முன்பு வணிகர்கள் கசாப்புக்கடை வைத்திருந்ததாக ஒரு ஆராய்ச்சியையும் நம் முன் படைக்கிருர். நம்மையும் அந்தக் கடை வைக்கச் சொல்கிருர். தானே விலை கொடுத்து வாங்குவதாகச் சொல்கிருர். (நினைவுபடுத்திக் கொள்ளுங்கள், எழுதியவர் பேராசிரியர்!) அவர் வாங்குவது கிடக்கட்டும்; நாங்கள் நாய் மாமிசம் விற்கமாட்டோமே, என் செய்வது!

ஒரு இடத்தில், "மொட்டைத் தலையை மயிர் (கிராப்பு) வைத்து மறைப்பது" போல் நான் என் உண்மைப் பெயரையும் சாதியையும் மறைப்பதாகக் குறிப்பிடுகிருர். பேராசிரியர் அவர்களுக்கே நேரடியாக ஒரு வார்த்தை! மயிர், வைத்து மறைப்பதல்ல; தானே வளர்ந்து மறைப்பது! 'சினிமா-மேக்-அப்' பற்றிக் குறிப்பிடுவதானுல், 'செயற்கையாக' என்று குறிப்பிடவேண்டும்! தனி வாழ்வில் யாரும் அப்படி மறைப்பதில்லை; குல்லாத்தான் போடுவார்கள்! "பிறர் எழுதிய கதையைத் திருடித் தாம் எழுதியதாக வெளியிடும் கள்ளர் மனம்..." என்கிருர். இதில்தான் அவர் இருக்க வேண்டிய இடம் கல்லூரியல்ல; செங்காங்கடை என்பது தெளிவாகிறது! பழைய திருட்டுப் புத்தி, பட்டை போட்டு சொலிக்கிறது! அந்த விவகாரத்தை, கொஞ்சம் இறங்கி வந்து சம்பந்தப்பட்ட இடங்களில் விசாரிக்கவேண்டும்! அப்போது உண்மை புரியும்! பேராசிரியரின் 'இமயமலையவ்வளவு மடமை'யும் தெரியும்! (ஆச்சரியம்! இவர் பேராசிரியர்!)

தான் எழுதிய பழைய கட்டுரைகளையே திரும்ப எழுதத் தன் மனம் கூசுவதாகக் கூறுகிருர். என் கூசாது! தாயை விபசாரி என்கிற சண்டாளர்களுக்கு மனமென்று ஒன்றிருந்தால், அது என் கூசாது! மாசறு பொன்னை, வலம்புரி முத்தை, காசறு விரையை, கரும்பை, தேனை, அரும்பெறற் பாவையை, அமுதை, கடைகெட்டவள் என்று, சாக்கடை ஆராய்ச்சி செய்யும் கேவலப் பிறவிகளுக்கு என் மனம் கூசாது! கூசுவது மட்டும் போதாது; அந்த மனத்தை, சொறி கல்லில் போட்டு வெளுக்க வேண்டும்; நல்ல அறிஞர்களிடம் கொடுத்துத் திருத்தி வாங்கிக் கொள்ள வேண்டும்!

நான் கோவலன்-பழம் பிறப்பு உணர்கிறேன்-கண்ணகிதாசன் என்பதை மருவாகக் கண்ணதாசன் எனக் கொண்டுள்ளேன்-அடடா! இதன்றே பேராசிரியர்மகிமை! கண்ணகி, என் சாதி என்பதால் வக்காலத்து வாங்குகிறேனும்! கண்ணகியல்ல; கோப்பெருந்தேவியைக் குறைபடக் கூறினும் நாக் கறுப்பதே நம்போன்ருர் கடன்! தாயருக்குச்சாதி இல்லை; இனம் தான் உண்டு! அவர்கள் கற்புள்ளவர்கள்-பத்தினிப் பெண்டிர்-என்கின்றன நமது பண்புக்கு ஏற்ற இலக்கியங்கள்! உள்ளே துருவி-எந்த விதமான அவசியமுமின்றி-சாதி வெறியைத் தவிர வேறு காரணமின்றி-கெட்டவர்கள் என்று கண்டு பிடித்ததாகக் கூறுவோர் யாராயினும் சரி; அவர்கள் துரத்தியடிக்கப்படவேண்டியவர்கள்! ஆம்; தமிழகத்தில் வாழத் தகுதியற்றவர்கள்!

நான் அவரது சாதியைத் திட்டுவதாகப் பேராசிரியர் கருதி, பித்துப் பிடித்துப் பிதற்றுகிருர்! அவருக்கு அதில் உள்ள வெறியைக் கூறினேனே அன்றி, அவரது சாதியைத் திட்டுவதாக அது இல்லை! கடிதத்திலேயே கடைசியில் தமது குலப் பெருமை கூறுகிருர் பேராசிரியர்! மீண்டும் படித்துப்பாருங்கள்!

கடிதத்திலும் கண்ணகி-மாதவியைச் சாடுகிருர்! வெறிபிடித்த பெரியவரே! வெறி உமக்கா நமக்கா!

பெரியார், அண்ணு, இவர்களோடு குருசாமியையும் அறிஞராக்கி, சமமாக உட்கார வைக்கிருர். ஒரு வேளை இவரது கீழ்த்தர கட்டுரைகளுக்கு அந்த ஆசிரியர் இடம் கொடுத்ததற்கு நன்றி கூறுகிருர் போலும்! ஐயா பேராசிரியரே! என்ன வேண்டுமானுலும் திட்டும்; பொறுத்துக் கொள்ளுகிறேம். அண்ணுத்துரைக்குப் பக்கததில் குருசாமியை உட்காரவைக்காதீர்! அவ்வளவுக்கு அவமானப்படுத்தாதீர்!

பேராசிரியர், தனது மரபு(சாதி) மக்களோடு வந்து என்னை எதிர்க்கப் போவதாகக் கூறுகிருர். அந்த வரிகளும் அவரது வெறியை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன! கம்பியத்தோழர்களெல்லாம் பேராசிரியர்போல அவ்வளவு [illegible]யுள்ளவர்கள்! இந்த வம்புக்கெல்லாம் முந்திவர மாட்டார்கள்! காரணம், நாம் அவர்களது சாதியைச் சாடவில்லை; அதில் பிறந்து தொலைத்தவரின் பித்தம்[illegible] பாவத்தையே எதிர்க்கிறேம்!

முடிவாக, பேராசிரியர் கொஞ்சம் இலக்கணம் படித்துக்கொள்வது நல்லது. எனக்குத் தெரிந்த குறைந்த அளவு இலக்கணமே, அவரது கட்டுரையில் பல பிழைகளைக் கண்டு பிடிக்கிறது! பன்மை ஒருமை வினையிலும், ஒருமை பன்மை வினையிலும் முடிகின்றன, பல இடங்களில். ஒருவேளை ஆத்திரத்தில் இலக்கணம் பிசகியிருக்கலாமென்று கருதுகிறேன். அல்லது, அறிவே அவ்வளவுதான் என்ருல், வருந்துகிறேன்; வெட்கப்படுகிறேன் - பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்காகப் பரிதாப்படுகிறேன்! என்போன்ருரிடம் இலக்கணம் பிசகலாம்; பேராசிரியரிடம் பிசகலாமா!

சுருக்கமாக, மேற்படி கடிதத்தை எழுதியவர் 'பேராசிரியர்' என்பதை நண்பர்கள் மறுபடியும் சிந்தையில் கொண்டு, தெருவில் கண்டால் கல்லெடுத்து அடிக்காமலிருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கோடைகாலத்தில் 'சிலது'கள் இப்படி ஆகிவிடுவதுண்டு! அதிலே இதுவும் ஒன்று. இனி, இதுபோன்ற 'குணக்கேடர்'களின் கடிதங்கள் வெளியிடப்படமாட்டா!

[கோமாளிப் பேராசிரியரின் "சிலப்பதிகார ஆராய்ச்சி"யைப் பிறகு பார்ப்போம் - வெகுவிரைவில்!]

இந்தப் 'பெருந்தகையாள'ரின் கடிதத்தில் இருந்து ஆறு வரிகளை நீக்கிவிட்டோம். காரணம் தென்றலில் கலக்கக் கூடாத கூவத்து வாடை அதிலே வீசுகிறது. ஆபாச எழுத்தாளர்கள் இவரிடம் பிச்சை கேட்க வந்துவிடுவார்கள். அவ்வளவு கீழ்த்தரமான வரிகள். அந்த வரிகளை அப்படியே வெளியிட்டால் வாசகர்கள் அவரை மனித இனத்திலிருந்தே இறக்கிவிடுவார்கள் என்பது எண்ணம்.

(ஆ—ர்)

வணங்காமுடி

புத்தம் புதிய கருத்தோவியங்களைத் தாங்கி வெளிவரும், மாதம் இருமுறைப் பத்திரிகை.

முதல் இதழ் 15-3-55 தேதி வெளிவரும்.

முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் எங்கும் தேவை.

விபரங்களுக்கு:
நிர்வாகி,
'வணங்காமுடி'
S. M. L. தெரு,
தேவகோட்டை.

விற்பனையாகிறது!

இடையே நிறுத்தப்பட்டிருந்த இன்பத்திராவிடத்தின் இலட்சியஏடு

தீ. மு. க. தமிழ் வார இதழ்

'மக்கள் மணி'

ஆசிரியர்: டி. பி. ஜெகந்நாதன்
தனி இதழ் விலை அணு 1
எங்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

சுவரொட்டிகளுக்கு எழுதுக!

நிர்வாகி
'மக்கள் மணி'
66. அய்யப்பசெட்டித் தெ[illegible]
மண்ணடி, சென்னை

வெண்பாப் போட்டி

3. கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

ஆடை அரையாடை; அன்னம் அரைவயிறு;
வீடதுவோ வான்கூரை வேய்ந்ததுவே--சேடியே !
கண்டிவர்தம் துன்பம் களையாதோர் தீங்குணத்தைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—கே. சீனிவாசன், செங்கல்பட்டு.

★

காலம் முழுதுழைத்துக் கொல்பசியால் வெந்தழிந்து
ஓலக் குரல்கிளப்பும் உத்தமரை;--ஞாலத்திற்
கண்டிட்டே மேலும் கடவுள் படைத்திடின்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—த. பெ. ஜீவரத்தினம், கழஞ்சூர்.

★

பசலைநிறம் நான்கண்டேன் பன்னாள் தழீஇயதால்
கசந்ததுகொல் என்மொழியும் காதலரே--பிசகேது ?
திண்ணைத் தீதன்னில் தண்ணிலவே எங்களைநீ
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—கோகனகா, கனியூர்.

★

சாகரீக மென்பார் கனிவெளுத்துத் தாழுடுப்பார்
தாகமென வந்தோர்க்குத் தண்ணீரும்--ஈகலார்
மண்டுமிவர் கொண்ட மடநாக ரீகத்தைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—டி. ஆர். வெங்கடேசன், கரூர்.

★

மூடப் பழக்கங்கள் முன்னவரின் செய்திளனத்
தேடிக் கடைப்பிடிக்கும் தீமுறையே--ஓடிடுவாய் !
மண்டு தமிழ்ச்சுடர்ஓர் மாற்றம் விடுக்குதுகேள்
"கொண்டுவந்து போட்டுக் கொளுத்து."

—கு. அண்ணாமலை, அத்திவாக்கம்.

★

சுளைத்தமிழால் காதல் சுவையுண்டே யன்பர்
நிலைஉயர்த்தும் பெண்ணினத்தை நேரே--விலைபேசிப்
பொன்னுக்கு விற்கப் புகும்மண ஏற்பாட்டை
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—அ. செழியன், காட்டுப்புத்தூர்.

★

செங்கதிரோன் வெங்கதிரால் செங்குருதி சுண்டிடவும்
அங்கண்மா ஞாலம் அழகடைய--மங்காத
தொண்டியற்றும் தோழர் துயர்நீக்கா காவலனை
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—சு. தமிழரசு, சிங்கபுரம்.

★

நஞ்சூட்டும் புத்தகங்கள் நன்மையில்லாத் திட்டங்கள்
பஞ்சையரைப் பாடாத பத்திரிகை--கொஞ்சமோ
கண்டுவிட்டுச் செல்லாத கட்டாக்கிச் செந்தமிழா
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—சற்குண பாண்டியன், கோம்பை.

★

மானந் தனையிழந்து வாழாதே என்கின்ற
நூன்முடி வுக்கிணங்கு; ஞொள்காதே !--ஈனமிதம்
எண்ணம் வளர்க்கின்ற ஏடுக ளத்தனையும்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

நற்றமிழர் வீரம் கலைநாக ரீகமெல்லாம்
முற்றுஞ் சிதைக்கும் மொழிநூலோ--மற்றெதுவோ
கண்டு வந்து பேசாதே கட்டிப் பெருந்தீயில்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—வித்வான் எஸ். தாமஸ் உடையார், தஞ்சை.

★

நாட்டு நடப்பை நிழற்படமாய்க் காட்டாது
கூட்டிக் குறைத்தெழுதும் நாளேடு--மீட்டும்நம்
தண்டமிழ்த் தாயகத்தில் தோன்றுவா றின்றேநீ
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—க. துரைராஜ், தாம்பரம்.

★

மன்பதைக்கே வொவ்வா மனுவாதி சாத்திரங்கள்
இன்குறள்சொல் நீதிக் கிணையாமோ ?--தென்றலரே !
பெண்ணடிமை யென்றுரைக்கும் பேதையர் நூல்வெந்தழலில்
கொண்டுவந்து போட்டு கொளுத்து.

—க. வீ. வரதராசன், கடப்பந்தாங்கல்.

★

அள்ளும் கனிமொழியே ஆயிழையே வண்டூதும்
ஒள்ளும் மணமலரே உன்னொடுநான்--கொள்ளுகின்ற
மண்டு முறைக்காதல் மாண்பிலையென் பார்கருத்தைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து. —உமர், ஆரணி.

★

நல்குரவால் வாடி நலிந்தோர் முகநோக்கிப்
புல்லரிசிக் கூழேனும் போற்றியிடப்--பல்காலும்
உண்டுவந்த வீட்டுக் குறுதீங்கு செய்தாரைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—முருகனடியான், கருவை.

★

சாதிகுலம் என்றலைவார் தாம்பிறந்த வாறறியார்
ஓதி உணர்வதெலாம் உட்கொள்ளார்--நீதியற்ற
கண்டகரா மிந்த கயவர் செயலையிங்கு
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—ஏ பார்த்தசாரதி, கரூர்.

★

கவிதை யழுதில் கடுநஞ்சு சேர்த்தே
புவிக்கீந் தனனந்தப் புல்லன்--கவிலையில்
பொண்டுகரா மன்போரைப் போற்றுவதா ? அந்நூலைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—சு, கவிதைப் பித்தன், வத்தலக்குண்டு.

★

வாழ்த்துத் திருக்குறளை வையத்தில் தென்கலையை
தாழ்த்தும் மனுநூலைத் தாழ்குழலாய்--ஆழ்கடல்சூழ்
மண்ணில் விரும்புவரோ மாத்தகையார் என்றெண்ணி
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து

—வி. ப. கோவிந்தசாமி, சென்னை-12.

★

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனென்றே ஆன்ற ஒழுக்காம--இறைவனூர்
பெண்டுகொள்ளும் நூலாம் பெரிய புராணத்தைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து.

—முத்து சம்பந்தன், சிதம்பரம்.

★

ஒன்றே குலமும் ஒருவனே தேவனென
நன்றே தமிழர் நவின்றிருக்க--இன்றுசிலர்
கொண்டே அவை பலவாக் கூறியநூற் குப்பைகளைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—அரு. க. காரழகன், சென்னை

★

விதிஎன்றும் வாழ்விங்கே உய்வுபெறத் தேவே
கதிஎன்றும் சொல்லிக் கயவர்--சதியினிலே
விண்ட புராண இதிகாசக் குப்பையைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து !

—என். ஆர். மதனகோபால், சென்னை,

தென்றல்
திரை

அடுத்த இதழில் !

பிரமிக்கத் தக்க படங்கள் !
சுவையான பல பகுதிகள் !
கருத்தையள்ளும் கட்டுரைகள் !

விலை அணா 4
ஆண்டு சந்தா ரூ. 3

Edited and Published by Kannadasan, 2/127, Mount Road, Madras-6. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 28, Muthu Mudali St., Madras-14.